# சித்தரின் சித்தாந்தங்கள்

**யாகவா - வசியா அறக்கட்டளை**
மேடவாக்கம்
சென்னை - 601 302.

# யாகவா

சத்யப்ரதானம்
சத்யத்வ ப்ரதானம்
சத்யஹா ப்ரதானம்
ப்ரபஞ்சஹ ப்ரதானம்
ப்ரதுனா ப்ரதானம்

இவ்வாறாக ஆயிரமாயிரம் வரிகள் கொண்ட இந்த ஆத்மவேதத்தை நமக்கு அருளிச் செய்தவர் ஆன்ம தத்துவத்தை உள்ளடக்கிய, அன்றாடம் இப்பிறவிச் சமுத்திரத்தில் உழன்று முத்தெடுக்க முடியாது தவிக்கின்ற மாதரார் குலம் தழைக்க வந்திருக்கும் இவரே யாகவா முனிவர்.

5000 ஆண்டுகளுக்கு முன்பு கோயில்கள் இல்லை சரித்திரங்களும் உரைக்கவில்லை. அன்று இயற்கையை பிரபஞ்ங்கள் உள்ளடக்கிய ஐம்பூதங்களையே வணங்கினர் என்று கூறும் இவர் இதுவரையில் 54 பிறவிகள் எடுத்திருக்கிறார். இவரின் பிறப்பு இனி இல்லை என்கிறார்.

முப்பத்து முக்கோடி தேவர்களை சிறை வைத்து மனிதரார் குலத்திற்கு உண்மையல்லாத வேதங்களை உரைத்த அரக்க அசுரர்களை வதம் செய்யவே தான் அவதாரம் எடுத்திருப்பதாக கூறும் யாகவா முனிவர் அவர்கள் நெல்லை மாவட்டம் அம்மன் புரத்தில் இலக்குவண நாடார் இசக்கியம்மையாருக்கு கருவிலே திருப்பெற்று மெய்ஞானியாய் அவதரித்தார். காலை முதல் மாலை வரை ஓடாய் உழைத்து வறுமையின் பிடியில் சிக்கி அலைந்து திரிந்து காலணாவிற்கும் கூலி வேலை செய்தவர். இவர் பிறந்தது ஓரிடம் ஓடெடுத்து அலைந்தது ஓரிடம் பின்பு வெற்றிகண்டு அடைந்ததோ மேடவாக்கம் என்ற சென்னையை யடுத்திருக்கும் ஓரிடம். பள்ளிக்கோ செல்லவில்லை. எழுத்தறிவில்லாத இவரிடமிருந்து மடைதிறந்த வெள்ளமாய் வேதமும் வியாக்கியனங்களும் எங்கிருந்து வருகின்றன. என்பதை ஆராய்ந்து உணர வேண்டியது நம்கடமை. இவரை ஆராய வென்றே கற்றோரும் மற்றோரும் பல துறைகளினின்றும் வந்து ஆராய்ந்து முடிவினை காண இயலவில்லை.

பிறப்பின் ரகசியங்களை இவர் உரைக்கிறார். விதியை கூறுகிறார். உப்பிற்கும் விதிக்கும் விடை கூறுகிறார்.

முகம் மாறுபட்டது இனம் இரண்டு உயிர் ஒன்று என்று கூறும் இவர் எல்லாம் எனக்கு தெரியும் என்று மமதையில் அலையாதே. நீ யார் என்பனை உணர் என்று உரைக்கிறார். மேலும் நீ இறக்க பிறப்பெடுத்து இரக்கமின்றி வாழ்ந்து என்ன பலனை காணப் போகிறாய். உன்விதியை உன் நெற்றியிலே 9 வரிகளாகவும் வரிக்கு ஒன்பது எழுத்துக்களாகவும் வரைந்தவன் நானே கருவறையில் இவ்விதிகள் எழுதப்பட்டு பூட்டப் படுகிறாய் என்றும், பின் 300 நாள் கழிந்து கருவறை திறக்க உன் விதிரேகைகள் நீ உணரா வண்ணம் பூட்டப் படுகின்றன எனவும் உரைக்கிறார். உன் விதியை நீ உணர இயலுமோ என்னும் இவரை பல நாட்கள் அணுகவேண்டும் அணுகினால் விடைகள் கிடைக்கும்.

ஞானம் என்பது பற்று, பற்றோ தர்மா சிறிதளவேனும் செய்தாலன்றி உனக்கு கிட்டாது. மரணம் என்று ஒன்றிருக்கு அதை சிந்தி, பொய் உடல் இது என்பதனை உணர் என்கிறார், இவரிடம் இருக்கும் மெய்ஞான அமிர்தத்தை பற்றாக உணர்ந்து வேதமே முக்திக்கு வழி வகுக்கும் என்பதனை நாம் உணரவேண்டும்.

மக்கள் பலர் இவர் நிகழ்த்திய அற்புதங்களைப் பற்றி உரைத்தாலும், ஆறுகள் பல பாய்ந்தாலும் கடல் நீர் கரைபுரண்டு ஓடாதது போல் எப்பொழுதும் சிரித்தவாறே அமைதியாய் திகழவார்.

யாகவாமுனிவர் அவர்களின் தத்துவமுத்துக்களை ஆதிவேதப் பிரணங்கள் எனும் கடலினின்று தேர்ந்தெடுத்த சில நல்முத்துக்களை உலகத்தாருக்கு வழங்க மேற்கொண்ட சிறு முயற்சி இது.

யாகவா போற்றி..

தி.பி. திருமலை

5000ம் ஆண்டுகளுக்கு முன்பிருந்த ஆதி நாத வேதங்கள், கவியும், புலமையும், தத்துவமும் வரையப்படுகின்றன.

ஆதியந்த காலங்களில் மானிடர்கள் வாழ்ந்த வாழ்வும், சக்ரவர்த்திகள் வாழ்ந்த வாழ்வும் வாழ்வாகும். முனிவர்கள் நல்லறிவுகளை போஜித்தார்கள். ஞானங்களையும், வேதங்களையும் அறிவுரைகளையும் போஜித்தார்கள். கோவில் குளங்கள் இல்லாத காலத்தில் பூலோகத்தில் நன்மைகள் செய்தாருண்டு. கர்மாக்கள் செய்தாரில்லை. ஆதிகாலங்களில் பொய் உடலென்று சித்தர்கள் மானிடப் பிறவிகளுக்குச் சொன்னார்கள். முனிவர்கள் லோகங்கள் 108 உண்டென்று சொன்னார்கள். மானிடர்கள் ஆதி காலங்களில் அதை உணர்ந்து வாழ்ந்து தர்மத்தால் முக்தி அடைந்தார்கள் இவ்யுகம் ஒரு நரகமென்று ஆதிகாலங்களில் உணர்ந்தார்கள். யுகத்தில் மரணத்தை உணர்ந்து மனிதர்களெல்லாம் வாழ்ந்தார்கள்.

ஆதி காலங்களில் முனிவர்கள் வாழ்ந்த இடங்களைத் தான் மன்னர்களும், சக்ரவர்த்திகளும் மனிதர்களும் வணங்கினர். சித்தர்கள், முனிவர்கள், மாயைகள், பிறப்பெடுப்பர், ரிஷிகள் பிறப்பெடுப்பாரில்லை. லோகத்தில் வாழும் ரிஷிகள் எக்காலத்திலும் இவ்யுகத்தில் பிறப்பெடுப்பதில்லை. நதிக்கரைகளிலும், இடுகாட்டிலும் தேவர்கள் குடிகொண்டிருக்கின்ற இடங்களில் சித்தர்கள் அமர்வர்.

ரிஷிகள் பிரபஞ்சத்தில் படிக்கின்ற ஏடுகள், பூலோகத்தில் முனிவர்கள், மாயைகள், சித்தர்கள் செவிகளில் விழுந்துதான் மானிடர்களுக்கு நல்லறம் கூறுகின்றனர்.

பிரபஞ்சத்தில், 333 மண்டலங்கள் உள்ளன. அவையில் முனிவர்களும், மாயைகளும், ரிஷிகளும், சித்தர்களும் வாழ்கின்றனர். மானிடர்களுக்கு 108 காண்டங்களும், தேவர்களுக்கு 333 மண்டலங்களும் உள்ளன. கதையென்றோ, கற்பனையென்றோ பொய், புறளியென்றோ நினைக்காதே.

பூலோகத்தில் யாகவா முனிவர் என்கின்றவர் அரக்கன், அசுரவன், தடாயவன் ராட்ஷசிகள் 21 பேர் என்கின்ற

இக்கயவர்களை அழிக்கத்தான் பிறவி கொண்டார். முப்பத்து முக்கோடி தேவர்களை மீட்கத்தான் இவர் வந்தார் இவரது 5000 ஆவது வயதில் 54 ஆவது பிறவியில் ராஷ்சர்களையும் ராட்ஷசிகள் 21 பேரையும் அழித்து 1986 ஜனவரி 2ல் இப்பூலோகத்தில் முக்தி அடைந்து பிரபஞ்சம் அடைந்தார்.

தன் கடமையை முடித்து ஓய்வு எடுத்துக் கொண்டிருக்கிறார். இவரது 54 பிறவிகளும் ஏழ்மைப் பிறவியே. வெளி நாடுகளில் 40 பிறவிகளும் பிரபஞ்சஸ்த்வம் என்கின்ற இந்தியாவில் மேற் பகுதியில் பதினோறு பிறவிகளும், கீழ்ப்பகுதியில் மூன்று பிறவிகளும் முக்திக்கு உள்ளாயின. எப்பிறவியிலும் இளமையிலே ஆடு மாடு மேய்ப்பார். பிச்சை எடுப்பார், இடுகாட்டில் நித்திரை கொள்வார். மண் சுமப்பார், மரம் வெட்டி விற்பார் இவருக்கு வாகனம் கழுதை. இவர் பள்ளியில் கற்றாரல்ல. துன்புற்று வாழ்ந்து உழைப்பில் இன்புற்று வாழ்கின்றவரே இவராவார்.

இவ்யுகத்தில் முதல் முதல் தான் பல்லாயிரம் மைல்களுக்கப்பால் மேற்பரப்பில் மானிடனாக பிறவி கொள்கிறார். இந்தியாவிலிருந்து மேற்பகுதியில், ஓர் வண்ணான் வீட்டில் பிறக்கிறார். அங்கு மலைப்பூவரசம் எனும் மரம் இருந்தது. மானிடன் நினைத்து ஏதும் நடவா யுகமெங்கும் கலகங்கள் மூழ்கின்றன. ஐந்தாறு வயது பாலகனாக இருக்கும் போதே மாயனார் இவர் திகைக்கிறார். உலகம் தோன்றி 38 ஆயிரம் கோடி ஆண்டுகளாயின. 1992ம் இதில் சேரும் ஆதிகாலம் சுபிட்ச காலங்கள். லோகத்தின் நிம்மதியை இவையில் கண்டாரும் உண்டு. அசுரவர்கள் மக்களையும், முனிவர்களையும் இரக்கமற்ற செயல் செய்வதை இவர் காண்கிறார். உலகமெங்கும், கூடுவிட்டு கூடு பாய்ந்து சுற்றி அலைகிறார்.

மானிடனாக உருவெடுத்து கூடுவிட்டு கூடு பாய்வதே இவர் செயலாகும். முனிவரிடம் வரம் பெற்றதால் அரக்கன், அசுரன், தடாயவன் ராட்ஷசிகளுக்கும் கூடுவிட்டு கூடுபாயத் தெரியும். முக்கால் வரம் பெற்ற முனிவர்கள் தான் லோகத்திலும் யுகத்திலும் ஆதியில் உண்டு. ஆதிகாலத்தில் பெரிய பட்சிகளும்

பெரிய ஜீவராசிகளும் மாயைகள் உருவில் நல்வழி கூறும். சாகாவரம் கொண்ட முனிவர்களுண்டு. பூவாகாய் புனிதமென்ற நீர் நிரம்பி வழிந்தன. பொற்காசு, கல் வெளிச்சம் இருளிலும் கற்களின் ஒளி. மதபேதம் இல்லை. இனபேதம் உண்டு. (ஆண், பெண் பேதம் உண்டு). பல பிறவிகளும் நான் அரக்கனால் கொல்லப்படுகின்றேன். அகில லோகங்களிலும் பிறக்திருக்கின்றேன். உன்னை ஒற்றைக் கண்ணால் காண்கிறேன். இன்னோர் கண்ணால் அசுரர்களைக் காண்கிறேன். மற்றும் ஓர் கண்ணால் அகில லோகங்களையும் காண்கிறேன்.

அவன் மனைவிகள் கருநாக பாம்புருவம் கொண்டு, கூடுவிட்டு கூடுபாயும் சமயம் பழிதீர்க்கின்றார்கள் கோழைச் செயல்தானே. வீரனொருவன் நேருக்குநேர் மோதுவதுதான் வீரனுக்கு அழகு. கலகங்களுக்கு ஆசையே காரணமாயின. அசுரவன் படைப்புயாவும் ஆசை கொண்டது பின்னால் அவனுக்கு நேர்ந்தகதி துன்பமே. பல பிறவிகளிலும் நான் பழிவாங்கப்படுகிறேன். 5000ம் ஆண்டிற்குள் 53 பிறவிகளும் மறவா ஞானமே. எப்பிறவியும் அரசன் வீட்டில் பிறக்கவில்லை நன்றாகக்கவனித்து நாளெல்லாம் சிந்தித்து விடைகொள்வார் ஞானி ஆவர். ஞானம் பெறுவார்.

நான் 53 பிறவிகளிலும் அரக்கனையும் அசுரனயும் சிறைபிடித்து தடாயவனை வெல்லும் சமயத்தில் தாசிகளால் நித்திரையில் உயிர் ஓரிடம். உடல் ஓர் இடத்தில் கிடக்கும் சமயம் பழிவாங்கப்பட்டேன். இக்காலங்களிலும், எப்போதும் என் நிலை ஓர் நிலை ஆகா. ஆகாயத்திலும் உலாவுவேன். இவ்யுகத்திலும் உலாவுவேன். கவி, புலமை, தத்துவத்தில் போட்டியிட யுகயாக புலவர்களுக்கும் அரக்கனின் ஆவண அழைப்பிதழ் அனுப்புவான். என்றும் போட்டியில் வென்றால் பொற்காசு பரிசு உண்டு. அறிவித்துள்ளான் இப்பொற்காசுக்காக போட்டி பொறாமைகள் பெருகின. நான் ஆடுமாடு மேய்ப்பது போல் மேய்த்துக் கொண்டு கூடுவிட்டு கூடுபாய்ந்து இவர்களின் செயல்களை கண்டேன். 3000 ஆயிரம் ஆண்டுக்கு முன் நான் முண்டு உடுத்தி, கொங்கு நாட்டுப் புலவனையும் சேரநாட்டுப் புலவனையும் சோழ, பாண்டிநாட்டுப் புலவர்களையும் ஆறு எழு வயதிலே கவிபாடி வென்றவன். பொற்காசை மன்னன் கொடுப்பான்.

அப்போது மன்னனே! பொற்காசு புனிதமாகா பொருளாகும் என்று நான் கூற மன்னனோ அழைத்திடுவான். பின் சில நாட்களில் மன்னனுக்குத் துணையாக நிற்கும் சேனாதிபதி எனக்கு பலவந்தமாக நஞ்சு கொடுத்து மடித்திடுவான். என் உடலை நீ அழித்தாய். என் உயிரை அழித்தாயோ உயிர்விடும் முன் இச்சொல் கூறினேன், அரக்கன் அசுரவன் உன்னைத் தூண்டுகிறான். நான் இன்றுகொல்லா பின்நாளில் பிறந்து கொல்வேன். மன்னனும், மன்னன் துணைவியும் (மகாராணியும்) துன்புறுவார்கள். புலவர்களும் துன்புறுவார்கள்.

இப்படி நாற்பது பிறவியும் அழிவே. இது கதை இல்லை. கற்பனையும் இல்லை. சொர்க்கலோகம் பக்கம் தான். உன் சொப்பனங்களும் நினைவாக நடந்திடுமோ? தடாயவன் சாம்ராஜ்யத்தால் அசுரதாண்டவனம். அசுரனின் படைத்தலாலும் ராட்ஷசிகளின் படைத்தலாலும் தப்பிப்பிழைத்த முனிவர்களும் கொல்லப்பட்டனர். நானும் கொல்லப்பட்டேன். பிணம் தின்னும் வீரியம் கொண்டவர் தான் இவர்.

தர்மத்திற்காக. அசுரர்களுக்குக் கண்விழி இரண்டும். மாயவர் ஆகின்ற முனிவருக்கும் கண் இரண்டு. இவ்மாயவராருக்கு கண்மூன்று. யாருக்கு பலம் அதிகம் என்பதை சிந்தித்து விடை கொள்கவே. சிலந்திக்கா? அருகம்புல்லுக்கா? கோரைப்புல்லுக்கா? சிலந்தி பறவைகளுக்கு தானியமாக உதவும். அருகம்புல் அசுரர்களை அழிக்க உதவும். கோரைப்புல் கொடியவர்களின் படைப்பே. முற்றிலும் அசுரர்களை அருகம்புல்லைக் கொடியாக ஒடச்செய்து கால் தட்டி விழுந்து சாகச் செய்வேன் நானே. கல்லால் கொல்வது பாவம். சாபத்தால் கொல்வது பாவம். துஷ்ட வஞ்சகர்களை புல்தட்டி சாகடிப்பது மேன்மைதானே. அருகம் புல்லின் பலம் ஆடுமாடு மேய்ப்பான் உணர்ந்திடுவான். அக்கால முனிவர்கள், சித்தர்கள் ஆடுமாடு மேய்ப்பவருக்கு உதவிடுவார்கள், அன்றும் இன்றும்.

5000ம் ஆண்டில் 3000ம் ஆண்டிற்குள் 40 பிறவிகளும் தோல்வியே கண்டார். மயில் இறகு அழகே. குயிலின் இனிய ராகமும் அழகோ? நாய் காத்திருக்கும் எஜமானனை. நரியும் காத்திடுமோ எஜமானனை சிந்தி! ஷாது என்பது காற்று. ஷாதுனா என்பது நீர்.

ஷாதுனாயவாயவா என்பது ஒலி. உனக்குள் ஒலியும் உயிரும் மறைந்துள்ளன. ஒலி என்பது விதியும், யாதுவாயனவா என்பது உன் உயிருக்கு உகந்த ஞானம் என்றாலும் இவ்யுகத்தில் உன் உயிர் துன்புற்றே வாடுகின்றது. காரணம் பிழையே உயிருக்குத் தண்டனை. மானிடருக்குத்தான் இவையெல்லாம் எழுதப்படுகின்றன. யாதுனாயவர்களுக்கு இது பொருந்தா. (முனிவர், சித்தர், மாயை மாதுவும் சாதுவும் சாதுஷ்வமே உயிர் உடல் விதி இவைகளுக்கு உகந்தவர்கள் தான் மாயவர்கள் என்கின்ற முனிவர்கள். 2000ம் ஆண்டிற்குள் இவர் செயலும் மறைவேயானாலும் பிறவி மானிடப் பிறவியே. பிறக்கின்ற இடம் யாவும் துதிபாடா இடமதில் தான் பிறப்பார். ஆண்டிகள் இல்லறத்தில் தான் பிறப்பார்.

லோகம் ஒருபுறம் யுகம் ஒரு புறம் இவருடன் மாயைகளும் முனிவர்களும் மறைந்தே வருவர், கூடுவிட்டு கூடுபாயும் சமயமும். நீ பார்ப்பதற்கு இவர் ஒருவர். இவரின் வலப்புறமும் இடப்புறமும் முனிவர்களும் மாயைகளும் இருப்பர். இவர் உடல் அங்கம் யாவுமே மானிடத் தோற்றமே. இவரை அரக்கன் ஞானப்புலமையிலும், கவியிலும் தான் அறிவான். எளிமையின் சொற்கள் கவியிலே அரக்கனின் படைப்புகள் மயங்கிடுவார்கள். அரக்கனின் படைப்பிலுள்ள.

கருநாகம் மகுடியில் மயங்கிடும் கருநாகத்தை மயக்கிவிட்டால் வென்றிடலாம் என ஓர் கணக்கு. இவர் கணக்கும் அப்படியே. பாம்பு நஞ்சாக உணவருந்தா போனாலும் அதன் செவிக்குள்ளே நஞ்சும் ஊறியுள்ளது. பாம்பிற்கு நான்கே பற்கள்தான். துள்ளி ஓடும் மான்களை தீண்டிடும். தீண்டிய மானை உண்ணாச் சென்றிடும். அதைத் தின்ற மாயப் பறவைகள், ஜுவாத்துவங்கள் யாவும் மாண்டிடும். சற்றே நஞ்சு. அவ்அரக்கன் படைத்த பாம்பினம் அழிய கீரிப்பிள்ளையைப் படைத்தவர் இவர். ஆகின்ற பொருளை இவர் படைத்தார். ஆகாப் பொருளை அவன் படைத்தான் அன்றும் இன்றும் மானிடர் மீது பற்று வைத்தார் முனிவர்களெல்லாம்.

அசுரவன் பெற்ற வரத்தின் வலிமை நாளுக்கு நாள் இவரால் குறைக்கப்பட்டது. முனிவர்கள் வரம் என்பது நெருப்பேயாகும். அதை அழிப்பதற்கு இவரிடம் பல

’யாதுவானவம், யாதுஷாஷம், யாகயாதானவஷாஷம் உண்டு. எவ்முனிவர்களுக்கும் இவர் - முழுபலம் என்றும் கொடுத்ததில்லை. இது மாயைகளுக்கும் சித்தர்களுக்கும் பொருந்தும். அப்படிக் கொடுத்தால் யுகத்தில் மானிடனே முனிவர்களிடம் வரம் பெற்றால் கூடுவிட்டு கூடுபாய்ந்து மானிடரார் குலங்களைச் சிதறச் செய்வார் என்பது இவையருக்குத் தெரியும். உடைத்துத் தின்னும் தேங்காய்க்கு ஓதுகின்ற பொருள் எத்தனையோ, கண்டேனே போதாதா? மானிடன் செய்கின்ற எச்செயலையும் நெற்றிக் கண்ணால் பார்க்கின்றார். மாயவரார் நெற்றிக் கண் ஒளியை நிறை குளத்தில் நீர்க்குமிழியாய் ஆக்கி நிற்கச் செய்திடுவார் இரு கண் பார்வை உன் மீதும், குளத்திலிருக்கின்ற நீர்க் குமிழி பார்வை அகில உலகமெங்கும் இருக்கும்.

ஆழத்தை நீந்திடுவாய். ஆல விதை, அரச விதை, அத்திவிதையை அளந்திடுவாயோ? நெல்லிக்காயையும் கனியா க்கிடுவாயோ? - முனிவர்களுக்கு இவையெல்லாம் மறைபொருளே. இவையெல்லாம் முனிவர்களுக்கு உதவிடும் என்றாலும் மானிடர்களுக்கும் உதவிடும்தானே. ஓர்பொருள் உனக்குதவும். பறவைக்கு உதவும் இவர் பிறவியின் ரகசியம் ஏராளம். 2000த்திற்குள் இக்காலப் பிறவியிலும் மேற்பகுதியில் பழிதீர்க்கப்படுகிறார். அரக்கனின் சாம்ராஜ்யம் தலைவிரித்தாடிக் கொண்டே இருக்கின்றது.

மானிடரார் படுகின்றபாடும் தடாயனிடம் சிறைப்பட்டு தத்தளிக்கும் முனிவர்களை மீட்க வந்த இவர் படும் பாடோ அப்பாப்பா. எப்பாடோ. கதை போல் ரசிக்காதே. கரும்பு நீர்போல் ருசிக்காதே. உப்பின் பருவம் உனக்குத் தெரியும். அதன் குணம் உனக்குத் தெரியுமா? உப்பிற்கு விதையேதும் உண்டா? என்றாலும் விடையும் உண்டே.

அசுரர்கள் தர்மங்களை கர்மமாக்கினான் கர்மங்களை தர்மமாக்கினான். திருடனுக்கு எது தெரியும். திருடத்தான் தெரியும். அசுர பலத்தால் ஆணவபலத்ததால் அதிகார பலத்தால் கொடுவாள் கொண்டே இவரை பழி தீர்ப்பதே அரக்கரார் செயலே ஆகும். அரக்கர்களுக்கு ஆசை, மோகம் அதிகம், மங்கைகள் மோகம், மதுவின் மோகம். அரக்கனுக்கு ஏழு மனைவிமார்கள் அசுரவனுக்கு ஏழு மனைவி.

தடாயவனுக்கு ஏழு மனைவிமார்கள் நீர் குடிப்பதற்குப் பதில் யாவையரும் மானிடர்களை பழி வாங்கி உதிரம் குடித்திடுவர். யுகத்திலிருக்கின்ற அரக்கனின் படைப்பிற்கும் இச்செயல்களே தான் ஆகும். யாவும் உணர்கிறார். இவர் அசுரகுலங்களை அழித்தே ஆக வேண்டும் என்பதில் தான் வீரியம் கொள்கிறார். 108 காண்ட முனிவர்கள், மாயைகள், சித்தர்கள், மாந்தர்களைக் காண விரும்பவில்லை. கயவர்களை அழித்து சிறைபிடிக்க வேண்டும் என்பதே இவர் நோக்கம்.

பசி இருந்தாலும் கூடாரத்தில் வாழ்ந்தாலும் கர்மாவை அழித்து தர்மா என்று சொல்லும் வரை ஓயா உழைப்பால் இவ் துஷ்டவந்தங்களை அழிப்பதே நோக்கக் குறி. படிப்பதற்கு இனிதாகத்தான் இருக்கும். இவர்பட்ட துன்பம் மானிடரார் உயர்வடைவதற்கே. யாக யாஷ்ய காண்டம் தீர்ப்புக் காண்டம் யாவிலும் தர்மங்கள் சிறைப்படுகின்றன. கர்மங்கள் இன்புறுகின்றன. யாஷ்ய தீர்ப்புக் காண்ட முனிவர்களை வதை கொள்கிறான், அரக்கன் என்னை முனிவர்களெல்லாம் உணருகின்றனர் சாடையாக பார்க்கச் செய்கின்றேன். என்னை துன்புறுத்த யான் சொல்லுகிறேன். முனிவர்களோ மறுக்கின்றனர். அரக்கர்கள் கண் இவர்மீது பட்டுவிட்டாலும் முனிவர்கள் மீது பட்டுவிட்டாலும் பின்பு துன்பம் என்பதை இவர் உணருகின்றார்.

மேற்பகுதியில் பதினோறு பிறவிகளும் பழிவாங்கப்படுகிறார். இவர் அழிவிற்கு காரணமே புலமை, கவி, தத்துவம் நிதான நிம்மதியான பொருளுரையே. அவன் வேஷம் கலையும்போது மாந்தரார் கூச்சலிட, இவன் பழிசெய்ய வரும் முன் அவன் - அசுரவன் பலம் குறைய அக்னி சாபத்தை விடுகிறார். முதலில் அரக்கனையும் பின் அசுரனையும் அதன்பின் தடாயவனையும் அவர்கள் மனைவிமார் 21 பேரையும் அழிக்கவேண்டும். ஐம்பது பிறவி வரை ஷாதுனாஷவம் (அன்பு) கொண்டு அழிக்க நினைத்தார். அவன் சூரளவம் நீர், காற்று வைத்து இவ்யுகத்தில் தன்னை வணங்கச் சொல்லி மானிடர்களை வதைக்கிறான். நல்லோருக்கு பொறுமை உண்டு. பெருமையும் உண்டு. நல் அறிவு இல்லாருக்கு பொறாமையே உண்டு. அப்பொறாமையே அசுரர்களுக்கு கைதேர்ந்த கலை.

முழு வரம் கொள்ளா இவ்முண்டங்கள் முக்கால் வரம் பெற்று, யாதுமே என்னிடம் என்று அகம் கொள்ள, இவர் அக்னியை ஏவி விடுகின்றார் அசுரர்களுக்கு.

அசுரன் கேட்கிறான் இவை இவையா உமக்கு இவ்யுகத்தில் எதுவேண்டுமானாலும் தருகிறேன். மரணம் அவனுக்கு நெருங்க நெருங்க அவனை இவர் அழித்திடுவார் என்பது உறுதிப்படுகின்றது. பின்பு 16 வய்தினிலே இவர் மரத்தடியில் நித்திரை கொண்டு கூடுவிட்டு சென்றிருக்கும் பொழுது ஒருவன் இவர் தலையை துண்டிக்கிறான். இவர் உயிர் யுகத்தில் உலாவி வருகிறது. 52வது பிறவி கொள்கிறார் 52 வது பிறவில் கருகொள்ளா ஜீவாத்துவ உயிர் கொள்கிறார். கிளி பேசும் பறவை மானிடரைப் போல். ஆடுமாடும் தொழுவிலே பேசும். ஆனைகள் மதம் பிடித்து ஊரினிலே புகுந்து விடும் இப்படி பிறவி கொள்ளா, ஜீவாத்துவங்களோடு கூடுவிட்டு கூடு பாய்ந்து அரிய பலம் அரிய பல செயல்களைச் செய்கிறார். கூடுவிட்டு கூடுபாய்ந்து ஜீவ ஜீவாத்துவங்கள் கொண்ட பறவைகளோடு அலைகிறார். 53 வது பிறவி கொள்வதற்குப் பலகாலம் அலைகிறார் துக்கத்தில் மானிடர்களை நினைத்து.

உடல் எடுப்பது இவர் ஒருவர்தான் என்றாலும் மாயை வசியாளும் மற்ற மாயைகளும் இவருக்குத் துணையாக எல்லா பிறவி கொண்டார்கள். காரணம் இவர் படும் துன்ப வேதனை தாளவில்லை . ஆதிகாலங்களில் தாய், தகப்பன் படும் துன்பத்தை பிள்ளைகள் பகிர்ந்து கொள்ளும். இக்காலங்களில் தாய் தந்தை சொற்களை கேளாததால் வீட்டிற்குத் துன்பம். உலகிற்கும் துன்பம். இவர் பிறவி கொள்ளும் இடம் ஓர் மறைவிடமாகவே இருக்கும். ஆடு மாடு மேய்ப்பார் இல்லறங்களிலும், வண்ணான் வீடுகளிலும், விறகு வெட்டி வீடுகளிலும் பிறப்பதற்குத் தான் குறி வைப்பார். இவருக்கு விதிவிலக்கு ஏதும் இல்லை. மானிடரார்க்கு விதிவிலக்கு உண்டு. மானிடரார் கர்மவினைகளால் பிறவி கொள்கின்றனர். மாயனார் அசுரர்களை அழிப்பதற்கு பிறவி கொள்கிறார்.

அசுரர்களை அழிப்பதற்கு இவரால் மட்டுமே இயலும். பயிர் வளர்க்கும் உழவனுக்கு யாவும் தெரியும் போல் மானிடரைப் பற்றியும் தெரியும். அசுரவனின் மந்திர தந்திரம்

கூடுவிட்டு கூடுபாயும் திறன் யாவும் இவையருக்குத் தெரியும். தடாயவன் வரம் கொடுத்து இவர்களை பிறக்கச்செய்து, துஷ்டராட்ஷசிகளை வைத்து நல்லோரையும் பழிவாங்கச் செய்திடுவான். இவைக்குள் விடைகள் மறைவே. முனிவர்கள், மாயைகள், சித்தர்களை தடாயனிடமிருந்து மீட்பது தான் இவருடைய முதற்கடமை. 52லும் தோல்லியுற்றேன். 53வது பிறவி மேற்குத் திசையில் தென்பகுதியில் மாடு மேய்ப்பார் இல்லறத்தில் பிறவி கொண்டேன். இவர் ஜனனவம் எப்பிறவி கொண்டாலும் அத்தாயும் தந்தையும் வதை கொள்வர். அசுரவனும் ராட்ஷசிகளும் இவ்விருவர்களையும் துன்புறவே செய்வார். வசியாளும் பிறவி கொள்கிறார். நான் பிறந்திருக்கும் இடத்திலிருந்து 18 மைல் தூரத்தில் பிறந்திருக்கிறாள்.

நான் பிறவி கொள்ளும் பிறப்பெல்லாம் இரண்டாவது மூன்றாவது குழந்தையாகத் தான், அத்தாய் கரு கொண்ட நாள் முதல் படும் துன்பம் அப்பப்பா எப்பாடோ. காரணங்கள் பலவுண்டு. அசுர போர்களில் வெல்வதற்காகவே நானும் என் துணைவியும் பிறவி கொண்டோம். அசுரவர்கள் செயல்களைக் கண்டு துயர் கொள்கின்றோம். அவர்கள் பெண்களை பலபாவம் செய்வதையும் அறிந்தோம்.

இருவரும் சேர்ந்து பெரும் பலம் கொண்ட தடாயனை அழிப்பதற்கு எண்ணுகிறோம். அத்திருடன் இகைத்வ காண்டத்திலிருப்பதையும் உணர்கிறோம். அவன் தன் தம்பிமார் அரக்கன் அசரனையும், அவனுடைய 21 மாயைகளையும் மானிடராக பிறக்கச் செய்கின்றான். மானிடர்களின் சீற்றம் உலகமெங்கும் பேரழிவாம். 2000ம் ஆண்டிற்குள் - இவையெல்லாம் - நடக்கின்றன. அசுரவன் லோக வழிக்கு தடாயவன் வகுத்து வைத்திருக்கும் ஓர் வழி துஷ்டன துஷ்டன துனாயனவா எனும் நட்சத்திரம். அது சிவப்பாக இருக்கும்.

அதை நோக்கி அவன் கூடுவிட்டு கூடு பாய்வதைத் தெளிவாக உணர்ந்தோம். இவன் கலகப்போர் இரும்போது வானலோகத்தைச் சீறச் செய்வான், இடி மின்னல் புயலால் முனிவர்களை அழிப்பதற்கென்று இவன் சாபத்தை விடுவான். புயல் காற்றை ஏவிவிட்டு விட்டு புன்னகை கொள்வான். யுகத்திலிருக்கின்ற ’கயவர்களும் மானிடர்களும் கிரகம் கணிப்பார்.

இதற்கெல்லாம் காரணம் அவ்துவா நட்சத்திரம் ஆகும். நானும் வசியாளும் கூடுவிட்டு கூடு பாய்ந்து இவ்யுக லோக அழிவினைத் தடுப்பதற்கு ஆராய்ந்த காலம் பலகாலம். அசுரபலம் கொடியதே. முனிவர்களை மயக்கி, அவர்களும் இப்பாவிகளுக்கு வரம் கொடுத்து, இப்பாவிகள் அகிலத்தையும் திகைக்கச் செய்கின்றனர். இரக்க மற்றான் என்று இருவரும், மற்றவர்களும் சிந்திக்கின்றனர் - 2000 - ஆண்டுமுன் உலகமெங்கும் அசுரவனின் சூழ்ச்சியால் உடல் பலம் பெற்றது. உயிர்பலம் குறைந்தது.

ஆதிகாலங்களில் ஆத்மபலம் 3/4, சரீர் பலம் 1/4 ஆக இருந்தது. அசுரவ காலங்களில் ஆத்மபலம் 1/4, சரீரபலம் 3/4 ஆகியது. யாவும் திகைப்பே. இப்பிறவியிலும் வெல்வது அரிது என்பதை நாங்கள் சிந்திக்க, அங்கு அசுரவன் அரக்கிகளை விட்டும், நாகக் கன்னிகளை விட்டும் இவர்களை எப்படியும் பழிதீர்க்க முடிவெடுக்கிறான். அசுர, அரக்க, தடாய பலத்தையும், ராட்ஷசிகளின் பலத்தையும் நாங்கள் உணர்ந்தோம்.

இப்பிறவியில் வெல்வது அரிதிலும் அரிதே. ஆனால் பயம் கொள்ளவில்லை. யாவும் உணர்ந்தவன் நான். எனக்குப் பின் வருவது முன் தெரியும். யாரிடம் சொல்வேன் நான். மன்னர் வீட்டில் பிறக்கவில்லை. மானிடர் வீட்டில் பிறந்தேன். துன்பம் ஓர்புறம் ஆறு வயதில் தாயும் ஒன்பது வயதிலே தந்தையும் மடிகின்றனர். என் மனைவி வசியாளை ஈன்றவர்களுக்கும் இக்கதிதான். எங்களை பெற்றவர்களை எப்பிறவியிலும் இவன் விட்டுவைக்க வில்லை. தடாயன் சொல்லி அசுரவன் இனள்வ காண்டத்தில் சிறை வைப்பான். 53 பிறவியின் தாய் தந்தையரை சிறை பிடித்தான் தடாயவன்.

என்னை ஈன்ற தாய், தந்தையரை 53 பிறவிகளிலும் சிறைபிடித்து இனள்வகாண்டம், இணைஸ்துவகாண்டம் இகைத்துவ காண்டங்களின் பாதாள - குகைக்குள் வைத்திருந்தான் அக்குகைக்கு கதவுகளெல்லாம் சொல்லால் திறக்கும். சொல்லால் அடைக்கும். வஞ்சம் தீர்க்கின்ற இவர்கள் படைத்த படைப்பும் அப்படியே. இராட்ஷசிகள் படைத்த படைப்பும் இரக்கமற்ற பெண்குலத்தார் ஆவர். 53 பிறவிகளிலும் நாங்கள் ஏகபோக துன்பத்தை அனுபவித்தோம். நாங்கள் இடுகின்ற சாபம் அக்னியே.

"துஷ்டார் துஷ்டய துவ்துவான துஷ்டாய துவாய துவாய துவன துவாயவே" என்று நான் சாபம் இட்டேன் அசுரர்கள் சிரிக்கின்றார். என் பிறப்பின் ரகசியங்கள் ஏராளம் உண்டு இதற்குள் ஏக மறைபொருளும் உண்டே . காரணம், எழுத இயலா பொருளே. என் பிறவிகளின் ரகசியத்தை தெரிந்து கொண்டால் இவ்யுகலோகத்தில் மதபேதம் என்பது தேவையில்லா பொருளாகும்.

நான் கூடுவிட்டு கூடுபாயும் சமயம் ஓர் மரக்கிளையில் படுத்திருக்கிறேன். இதனை ஓர் ராட்ஷசி பார்த்துவிட்டு அசுரனிடம் சொல்ல அவன் தலையைக் கொய்யச் செய்கிறான். உயிரிருக்க கொல்லா, உடலைவிட்டு கூடுவிட்டு கூடுபாய துண்டித்தால் உயிரடையை பொருளாயின. துணைவியார் வேதனை கொண்டு அழுகிறாள், புரளுகிறாள் என் செய்வேன் நான். பின் வசியாள் நாகம் தீண்டி மடிகிறாள். 53வது பிறவியிலும் தோல்வியே கண்டார். கர்மங்கள் ஜெயித்தன. தர்மங்கள் தலைகவிழ்ந்தன. தர்மங்கள் தலைதூக்க, அசுரர்களை வெல்வதற்கும் 54வது பிறவி கொள்ள இடம் நோக்குகின்றேன். எப்பிறவியிலும் நான் முதல் இரண்டாவது மகனாகப் பிறப்பதில்லை. மூன்றாம் மகனாக பிறப்பதே உண்டு.

பார்ப்பதற்கு மானிடன். பழகுவதற்கும் மானிடன் என்றாலும் இவர் சொல் செயல் மானிடராகா மாயவர் ஆவர். என்னிடம் வரம் பெற்றார் யாருமில்லை. எனக்கு வரம் கொடுத்தாரும் யாருமில்லை நான் தவமிருந்து வரம் பெறவில்லை. நீ அகிலங்களை மறந்து பேராசையில் வாழ்கின்றாய். நீ நினைத்து ஏதும் கிட்டிடுமா? கிட்டிட்டால் என்னை நீ நினைப்பாயா? 54வது பிறவி பிறப்பதற்கு இடம் தேடி யுகமெங்கும் சுற்றி வருகிறேன். எங்கு நல்லான் இல்லறத்தில் துன்பம் தலைவிரித்தாடுகின்றனவோ அங்குதான் நான் ஜனனம் கொள்வேன். வழி கேட்க மாட்டேன். எல்லாம் எனக்குத் தெரியும் 54வது பிறவியில் தோல்வியுற்றால் 2000ம் ஆண்டில் மூன்றடி நாலடி அசுரர்கள் சாம்ராஜ்யம் வந்துவிடும். முனிவர்கள் யாவையரும் அரக்கர், அசுரர்களை அழிப்பதற்கென்றே சபதம் கொள்கின்றனர். இவ் துஷ்டர்கள் யுகம் கொள்ளும் முன் 54வது பிறவி ஜனனம் எடுத்தேன். தெற்கே கன்னியாகுமரி பக்கம் கடற்கரைக்குச் சற்று தூரம் ஜனனம் கொண்டேன்.

என் - 54வது பிறவி ஜனனவம் ஜனனம் முற்பிறவிகளையும் உணர்கிறேன். மானிடரார் முற்பிறவியின் பலாபலன் உணர்வது அரிதே. அவாயவ முனிவர், ஞானியர் யாவரும் யாகாயன பிறவிகளை உணர்வர். யுகத்தில் துறவி போல் வாழ்வர். துன்பத்தில் மடிந்திடுவர். மானிடன் என்பவன் அகில லோகங்களிலும் உயர்ந்த நிலை அடைகின்றான்.

54வது ஜனனத்தில் ஜனனம் கொண்ட நாள் முதல் அரக்கனிடம் போரிடுகின்றேன். என் ஜனனத்திற்குப் பின் ஓர் ஜனனம். என் ரகசியங்கள் ஏராளம். கருகொண்ட நாள் முதல் கூடுவிட்டு கூடு பாய்வேன். தாய், தந்தை, சகோதரிகளும் துன்புறுகின்றனர். நான் ஜனனம் கொண்டுள்ள தாயைச் சுற்றிப் பல மாயைகள் பலமுனிவர்கள் யாதுனவம் கொள்கின்றனர். ஜனனம் கொண்ட நாள் முதலே லோகம் எங்கும் உலாவுகின்றறேன். எப்பிறவியும் இவ்வாறே 54ம் வெற்றியா தோல்வியா? தர்மம் முந்துமா ? கர்மம் முந்துமா? கலகம் முந்துமா ? கடமை முந்துமா? பார்போம். பொறுமை புகழாகா. தர்மம் புகழாகும். உயிர்வதை கொள்ளா தர்மம் உச்சியிலே குடிகொண்டிடும் யாக யாஷயத்தில். இது. உலகில் வாழ்கின்ற மானிடரார் யாவையருக்கும் அறிவு வழி.

54வது பிறவி நெல்லை மாவட்டம், திருச்செந்தூர் தாலுகா, அம்மன்புரம் கிராமம், கீழப்புதுக்குடி வடக்கூரில் லட்சுமணன் நாடார் இசக்கியம்மாள் இவர்களின் நான்காவது பிள்ளையாக பிற்நதேன். எனக்கு முந்தியவர் இரண்டு சகோதரிகள் இவருடன் நான் இரட்டையராகப் பிறந்தேன். அதில் இளைவராக மூன்றாம் பிறப்பு நான்காவது நான் அரக்கினடம் உன்னையும், உன் அண்ணன்மார்களையும் உந்தன் மனைவி 7 பேரையும், உன் அண்ணன்மார்களின் ஏழு மனவிகளுடனும் உன் கங்கனத்தை அழிப்பது நிச்சயம். அவன் பல ஆசை வார்த்தைகளைக் கூறகிறான்.

யாக யாகா, நீர் என்னை ஏதும் செய்யாதீர் என்று கூற நான் "துஷ்டா துஷ்டா துவனாதுஷ்டா'+' லோகத்திலிருந்து உன் இனத்தையும் உன் அசுர இனவிர்த்தியையும் அழிப்பதற்கென்றே, நான் மற்றும் வசியாள், தர்க்கமுனிவர் மாயைகள் முனிவர்கள் வந்தோம்.

உன் சாம்ராஜ்யவர்கள் 53 பிறவிகளிலும் நான் கூடுவிட்டு கூடுபாயும் சமயம் கோழைச் செயல் செய்தனர். இனி உன்னை உன் சாம்ராஜ்யவர்களை அழிப்பது அழிப்பதே என்று கூறி, அரக்கன் உயிர் உடலையும் அசுரவ வரத்தையும் ஆவனங்களையும் அக்னி சாபமிட்டு சிறைபிடிக்கின்றேன் என்னுடைய பதினோறாவது வயதில். இதற்குள் ஏகபோக விடைகள் உள்ளன.

அரக்கனை பட அழித்து இனள்வ காண்டம் திறக்கப்படுகின்றது. இனி இணைஸ்த்துவ காண்டம் திறக்க வேண்டும். அசுரவ போர் தொடங்குகின்றேன். அவனை வெல்வதற்கு யாஷ்ய முனிவர்களும் இனள்வ காண்ட முனிவர்களும் எனக்கு முன் துணை நிற்கின்றனர். அரக்கனால் பிடித்து சிறைவைக்கப்பட்டிருந்த பலகோடி முனிவர்களை, பலகோடி சித்தர்களை, பலகோடி மாயைகளையும் மீட்டேன். அக்காலங்களில் என்னுடைய 12 வது வயதில் சீற்றம்தான். அசுரர்களுக்கும் சீற்றம் தான். இதை மானிடரார் எப்படிப் புரிவர். கோபக்காரன் என்று மட்டுமே கூறுவர். செயல் உணரா யார்யாரோ எதோதோ சொல்வர். சொல்வார் செயலறிவார் அறிவார் உணர்வர். இவையரை உணர்ந்திடுவர்.

அரக்கனை அழிக்கும் சமயம் நான் சென்னையில்தான் இருந்தேன் சமையல் காரனாக. அரக்கன் அழியும் இடம் நான் பிறந்த இடமே. இருப்பது யுகத்தில் லோகத்தில் கலகங்கள் நடந்து கொண்டிருந்தன. நான் செய்யும் கலகம் மானிடராகும் மற்ற ஜீவஜீவர்களும் துவங்க நன்மை அடையவே போரிடுகின்றேன். புகழுக்கோ, பரிசு பெறுவதற்காகவோ, பட்டம் பதவி வகிப்பதற்காகவோ அல்ல. சான்றோர் சான்றோராக வாழ்ந்து லோகம் அடைவதற்கே இத்தனையும் செய்கிறேன்.

அசுரனிடம் 11 வயதிலிருந்தே போர் ஆரம்பிக்கப்படுகிறது. அரக்கனிடம் இருந்து விடுவித்த முனிவர், சித்தர், மாயைகள் எனக்கும் வலப்புறமாக நின்று பலம் கொடுக்கின்றனர். லோகத்தில் இனள்வகாண்டத்தில் இதனுள் அசுரர்களை அழிப்பதற்குரிய சொற்களும், மண்டலங்களை திறக்கப்படும் சொற்களும் மறைக்கப்படுகின்றன. சாபச் சொற்களும், அக்னிச்சொற்களும் மறைக்கப்படுகின்றன.

காரணம் இச்சொற்களை பயன்படுத்தினால் பெரும் துன்பத்திற்குள்ளாவீர் என்பதற்காகவே மறைத்து எழுதப்படுகின்றன. சொற்கள் மறை பொருளாக உள்ளன.

முனிவர்களுக்கு முக்கால் வரம் கொடுத்தே இச்செயல். யாவும் உணர்ந்தவன். யாரையும் நம்பாதவன். அவரவர் உயிர் அவரவரை நம்பாதது போல் நான் யுகத்திலும் யாக யாகாத்வ பிரபங்சத்திலும் முழுவரம் கொடுப்பதில்லை அசுரப்போர் பலகாலம் நடக்கின்றன. நானும் பம்பாய் செல்லுகிறேன். மாதுங்காவில் ஸ்ரீ கணபதி ஸ்டோரில் சில காலங்களும், செம்பூரில் சில காலமும் பம்பாயில் வில்லாபாரலாவில் ஸ்ரீ கணபதி ஸ்டோரில் சிலகாலமும் 15ரூபாய் கூலிக்காரனாகத்தான் வாழ்ந்தேன்.

சென்னையில் சமையல்காரனாக இருந்தபோது 5 ரூபாய் கூலி. பம்பாயிலும் சமையல்காரன்தான். இவ்யுகத்தில் பஞ்சம் கண்டு கலங்கவில்லை. பட்டினி கிடந்தும் பயப்படவில்லை. மானிடர்களை அவன் செய்யும் துன்ப துன்பங்களை கண்டு தான் வேதனை அடைந்தேன். கவலைப்பட்டேன். ஓர் செயலுக்காக இரண்டிரண்டு செயல்களை அவர்கள் மீது வைத்து பழிவாங்குகிறான்.

என் வயது 15, 18 ஆகியது. பம்பாயில் சிலகாலம் இருந்துவிட்டு ஊர் வந்தேன். ஊரில் பஞ்சம். சகோதரிகளுக்கு திருமணம் முடிந்துவிட்டன. என் பெயர் லட்சுமணன். இரட்டையராகப் பிறந்ததினால் பெரியவர் பெயர் ராமன். இதற்குள் எனக்கு ஓர் சடைப் பெயரும் உண்டு. என் தகப்பனார் பெயர் லட்சுமணன் என்பதால் என் தாயார் முத்து என்று அழைப்பதுண்டு பள்ளியில் சேர்க்கும் சமயம் லட்சுமணன் என்றே குறிப்டுகின்றார். என் பெயர்தான் பள்ளியிலிருக்கும். நான் குளக்கரை, மரம், செடி கொடிகளிருக்கும் இடம், ஆடு மாடு மேய்ந்து கொண்டிருக்கும் இடங்களில் பொழுதைப் போக்குவேன். இவருக்கு உழைப்பே ஓர் கைதேர்ந்த கலையாகின. மற்றவர்களுக்கு உதவுகின்ற குணமும் எனக்கு என்றும் உண்டு. சொல்லிச் செய்யா நான் சொல்லாமலேச் செய்வேன். நல்லதைச் செய்வேன். அசுரர்களை அழிப்பது மட்டும்தான் பிறருக்குக் கெட்டதாக் தெரியும். ஆனால் இதற்குப் பல காரணங்களுண்டு. தர்மம் தழைக்கவே இப்பாடு.

22 வயதிற்குள் அசுரரை அழித்தே ஆகவேண்டும். எதையும் வரும்முன் கணக்கினை முனிவர்களெல்லாம் வகுத்திடுவார். முனிவர்கள், மாயைகள் சித்தர்கள் செய்யும் எச்செயல்களையும் அறிந்திடுவேன் என்றால் மானிடரார் செய்யும் செயல்களை அறியாதிருப்பரோ. அசுரர்களுடன் கலகம் மூண்ட பட வண்ணமே இருக்கின்றன.

அவன் இணைஸ்துவகாண்டத்தில் மன்னராட்சி புரிகின்றான். அவன் அதிகார பலன்களே அவனுக்கு அழிவானது. யார் என்ன செய்ய? மானிடரும் மற்றவர்களை அழித்து நாடாள நினைக்காதீர். என்னுடைய 54வது பிறந்த நாள் 1941 மார்ச் 2 ஞாயிறு காலை. பதினேறாவது வயதில் தொடுத்த போர் என்னுடைய 22வது வயதிலே அசுரவன் என்னுடைய துஷ்ட சாபத்தால் பழிதீர்க்கப்படுகிறான். அவன் இணைஷ்வ காண்டத்தில் சிறைபிடிக்கப்பட்டான். கர்மங்கள் அழிகின்றன. தர்மங்கள் தலைதூக்கப் போகின்றன.

இனள்வ காண்டத்தில் அரக்கனும், இணைஸ்துவ காண்டத்தில் அசுரனும் சிறைபிடிக்கப்பட்டார்கள். மூன்று காண்டங்களில் இரண்டு காண்டங்கள் திறக்கப்பட்டுவிட்டன. தம்பிகள் இருவரையும் நான் சிறைபிடித்தேன். யாவரிலும் பலம் கொண்ட தடாயனிடம் நான் 22 வருடகாலங்கள் போர் தொடுக்க வேண்டும்.

இவ் அசுரர்களின் துணைவிமார் 21 இராட்ஷசிகளையும் பழிவாங்க வேண்டும் நான் யுகத்தில் பட்டமரங்களை வாங்கி உடைத்து ஊர் ஊராக சென்று விற்றுவந்தேன். மாயவன் எனக்கே இப்பஞ்சமென்றால் மானிடர்களுக்கு எத்தனை பஞ்சமோ? அவனிடம் போர்தொடுக்கும் போது பஞ்சம், புயல் சீற்றம், வெப்பம் இப்படி பேரழிவுகளைத்தான் யுகத்து மக்கள் கண்டிருப்பீர்.

அக்காலங்களில் அசுரனின் படைப்புகள் தான் இன்பமாக வாழ்ந்தன. முனிவர் படைப்புகள் யாவும் முகம்வாடி அழுதவண்ணமே இருந்தன. அக்காலங்களை நீ கணக்கிட்டுப் பார்த்தால் உணர்ந்திடலாம்.

தடாயவனை அழிப்பதற்கு பெரும் துன்பப்பட்டேன், 24, 25 வயதுகளில். நான் லோகத்தில் இரு உடல் எடுத்தேன். யுகத்தில் ஓர் உடல் எடுத்தேன். 25 வயது முற்பகுதியில் எனக்கு திருமணம் கூடுகிறது. நான் துறவறம் கொள்ளவில்லை. கண்மூடி தவம் செய்யவில்லை. உழைப்பின் ஓர் பக்தியை மற்றவர்களுக்குக் கொடுத்தே வாழ்ந்தேன். திருமணம் என்பது யாவையருக்கும் போலல்ல. திருமணத்தில் மறை பொருள் உள்ளது. எனக்கு வசியாள் தான் என்றும் மனைவியாவாள். திருமணம் முடிந்தும் 26,27 வயதிலும் விறகு வெட்டியாகத்தான் அலைந்தேன். 27 வயதில் யுகலோக துஷ்டர்களால் பல துன்பத்திற்குள்ளானேன். நான் யாரையும் துன்புறுத்த மாட்டேன். துன்புறுத்துவாரை துன்புறுத்தாமல் விடவும் மாட்டேன். வயது 29. இன்னும் துன்பம் துரத்துகிறது. அம்மன்புரத்தில் என் தாயார் செய்த அரிசி, நெல் வியாபாரம் செய்தேன். சொந்த பந்தங்கள் உதவவில்லை . மணமுடித்தார் வீட்டிலும் உதவினார் இல்லை .

அறிவு ஞானத்திற்காக, அன்பு ஞானத்திற்காக எழுதப்படும் கருத்து இவையெல்லாம், அன்பும் அறிவும் யாரிடமும் உண்டோ அவையரே சத்யர் என்பதை உணர். திமிரை நீ திறமையாக்கு. அதிகாரத்தை அன்பாக்கு. வேஷத்தை பாசமாக்கு. எப்பட்சி பறவைகளும், ஜீவராசிகளும் வேடம் தரிப்பதுண்டோ ? நினைத்துப்பார். ஐந்தறிவு கொண்டதெல்லாம் கூடி வாழக் கண்டாய். ஆறறிவு கொண்ட மாந்தரார்குலமே நீ ஏன் கூடி வாழா வாழ்கின்றாய். ஆதியில் கூடி வாழந்தார். 5000 ஆண்டின் பின் கூடி வாழ்வாரைக் 1986 வரை காணேன். உன் அகந்தையே இதற்குக் காரணம். அறிவைத் தொலைத்து விட்டாய் என்பதற்காக இவையெல்லாம் எழுதப்படுகின்றன. இது ஒரு ஆதி ஞானமாகும். இவையை நீ பின்பற்றினால் உன் அகந்தை குறையும். ஆசை குறையும். உன் தர்மா பெருக இதுவே ஒரு ஞானம்.

நீ விதியாக யூகி விடையாக யூகிக்காதே. ஞானம் எனும் ஆத்மாவிற்கு மணம் தேவை. அவ்மணம் தாயிடம் முதலில் காண்கிறாய். பின் தந்தையிடம் காண்கிறாய் என்றால் இவ்வுலகில் முதலில் உயந்தார் உன்னை பெற்றார்தான் என்றால் உணர்.

உன்னை நீ உணர் பின் உலகத்தை உணர். அறிவு வளர ஆற்றல் தேவைதானே என்றால் யூகி.

உயர்வும் தாழ்வும் சரீரம். ஆத்மா யாவையருக்கும் ஒன்றே பசுமை உப்பிடம், பின் வித்துக்களிடம். உன் எவ சரீரத்திடம் உண்டா? காற்றுக்கு காற்றுத்தானே துணை என்றால் யாவைக்குள் யாவை என்பதை யூகி.

திறன் பட வேண்டும் உனக்கு, உலகிற்கும் மனிதரார்களுக்கும் உதவிட.

நீ பிறக்க யாரிடம் பால் அருந்துகிறாய். யார் உன்னை வளர்த்தார். யார் உன்னை தினமும் நேசித்தார். தாய் தந்தை. இவர்கள் தான் உயர்ந்தார் என்பதை நீ இளமையில் உணர்.

நீ இவ்வுலகில் கண்டிட்ட மகிழ்வும் யாது. சற்று சிந்தித்துப்பார். பிறக்கின்றாய் இருக்கின்றாய் இறக்கின்றாய். என்றால் உன் ஆத்மா ஓர்போதும் அழியாது கனி அழுகினாலும் விதை அழுகாது. விதைக்கு ஞானம் உண்டு போல் உன் ஆத்மாவிற்கும் உண்டு. உன் சரீரம் பிறர் எனக் கூறா உதவி செய்தால் அவ்வுலம் 111ல் தாராளமாக வழி உண்டு.

அறிவான குலமே உன் திறன் அன்பானால் இவ் உலகிற்கு நன்மை தானே யூகி.

உயர்வும் தாழ்வும் சரீரம். ஆத்மா யாவையருக்கும் ஒன்றே.

நீ யாவையையும் அறிவாக யூகி. யான் காற்றாக திறனானால் தாழுவாயா? மழையாக சீறினால் தாழுவாயா? குளிர், பனியானால் தாழுவாயா? வெப்பமானால் தாழுவாயா? உன் ஆத்மா சீறிவிட்டால் உன் எவசரீரம் தாழுமா? இவைக்குள் ஏராளமான விடை உண்டு உணர் யூகி

வித்துக்கள் உன்னை ஏமாற்றக் கண்டாயா? உன் ஆத்மத்தை யூகி. உதவி செய் சற்றாற்றும் உன் ஆத்மத்துக்கு நன்மை .

சரீரத்திற்கு வித்தின் குணம் தெரியும் போல் ஆத்மாவிற்கு மலரின் மணம் தெரியும் என்றால் உன் ஏமாற்றலையும், உன் திமிரையும் ஆத்மா உணராது எனப் பொருளா மனிதா சிந்தி! விடை கிடைக்கும்.

ஆசை தேவை. அன்புக்கும், அறிவுக்கும், தர்மத்திற்கும் ஆசை தேவை. அவ் ஆசை பிறருக்கு உதவினால் உலகிற்கு நன்மைதானே (உன் சொல், செயல்) உணர்.

மனிதா! வீரிய வித்து என்றால் எவ்விதையும் யூகி விதை மணமா? இலை மணமா? மலர், காய், கனி யாகை மணம்? எகைக்குள் எவ்எவை என்பதை உன் ஆத்மா தெளிவாக உணரும். உன் எவசரீரத்தை சற்றாவது சிந்திக்கச் செய்.

மனிதா ! எச்சுவை சுவை. இச்சுவை சுவை என்றால் அச்சுவை அன்புள்ளச் சுவை. அன்பும், அறிவும், தர்மமும், தத்துவமும் தான் சுவை. சரீர் நாடக வேஷமும் சுவையோ யூகி விடை உண்டு.

மனிதா ! இன்பத்தைக் காண இளமையில் உன்னை நீ புரிந்து கொள். நன்மையாவும் கிடைக்கும்.

மனிதா! நீ சுபம் காண வழி இது. அதுதான் தர்மம். தர்மம் என்பது ஞானம். தத்துவம் என்பது பசுமையான ஆத்மவ சுபம். நீ சுபம் எனும் காற்றையும், சுகம் எனும் நீரையும் யூகி காலம், விதி என்பது திறனற்றதே.

தத்துவம் என்பது நீ. தர்மம் என்பதும் நீ. கர்மம் என்பது உன் சரீரம் என்றால் நீ ஆத்மத்தை சிந்தித்து உணர்.

மனிதா ! விதை தூவா நீ மதம் தூவி கண்டபலன் என்னவோ? வித்தைத் தூவினேன் நான். நீ உணராதது மதம் எனும் அகம் அறிவாற்றல் வித்துக்களிடம் உண்டே . உன் மதம் அகம் சிந்தி!

நீ இவ்யுகத்தில் இன்புற்றா வாழ்கின்றாய், சலிப்புற்றுத் தானே வாழ்கின்றாய். ஆத்மா துன்புற்றுத்தானே வாழ்கிறது. இவையினுள் எது கண்டாயடா மனிதா! சிந்தி!

மனிதா ! ஆக்கத்தின் ஆக்கத்திறன், யாற்றனத்திறன், ஞானத்திறன், நிதானத்திறன் நிம்மதியின் திறன். ஆற்ற ஆற்றிற்ற ஆற்றலே திறன் என்றால் சற்று சிந்தித்து உன்னை உணர் பின் உலகை யூகி.

அன்பைச்சொல். அன்பைச்செய் அம்பனச்சொல் வம்பினை போல் என்றால் எவையும் அறிந்த நீ நிதானமாகக் சொல் உலகிற்கே நன்மை.

உண்மை பேசுவதும், உதவி செய்து மறப்பதும் ஞானம்.

நீ பிறரை ஏமாற்றி கண்ட பலன் பிணி, பஞ்சம், துன்பம் உன்னை நிம்மதியிழக்கச் செய்யும் உன்னுள்ளிருக்கும் காற்று அதுதான் ஆத்மா. அதற்கு யாவும் தெரியும்.

இளமையில் உனக்கு பாசம் இருக்கக் கண்டேன். பின் உன் தோற்றம் யாவும் பணம் பதவி, பாசமற்றச் செயல் என்றால் பின் நீ உலகில் கண்டதும் யாது? சிந்தி!

வேட்டையாடும் புலியும் நரியும் கண்டேன். உன் விஸ்வா சமற்ற வேட நாடகத்தையும் பார்த்தேன். என் செய்யும் யுகம் ஆத்ம சரீரத்தை யூகிக்கச் செய் உலகிற்கு நன்மை.

மனிதா ! எல்லாம் தெரியும், என்னால் யாவும் முடியும் எனக் கூறாதே. ஒரு சிறு விதையின் அறிவை உணர் வாயானால் உன் ஆத்மத்தை நீ உணரலாம்.

மனிதா, உனக்கு பணம், பதவி தேவைதான் என்றாலும் நேர்மை, அன்பு, பாசமும் தேவை.

வழிசொல்வார் நல்லார். அன்பும், பாசமும் கொள்வார் நல்லார். அறிய தெரிய நீ.

மனிதா ! துன்பம், பஞ்சம் துரத்துகிறது என்றால் நீ முன் செய்திட்ட கொடிய பாவம்.

மனிதா! கிரகணத்தால் கண் போகும் என்கிறாய் என்றால் பிச்சைக் காரனும், காட்டில் வாழ்கின்ற மனிதர்களும், குரங்கும், இன்னும் எத்தனையோ ஜீவரத்துவங்கள் உள்ளன. உன் சரீர் நாடகம் ஆத்மாவிற்குத் தெரியும்.

மனிதா ! நீ கற்றாய். உன்னுள்ளிருக்கும் காற்று யாவை கற்றது ? உணர்.

அறிவைத்தான ஆத்மா கற்கும். நீ எது யாதோ கற்றேன் என்கிறாய். அன்பைக் கற்றுவா. உலகிற்கு நன்மை. ஆடும், மாடும் மேய்ப்பானை சற்று சிந்தித்து உணர். யாவைக்கும் விடை கிடைக்கும்.

மனிதா ! நிழல் போல் காற்று
சுழல்வதும் காற்று
உன்னுடனும் காற்று
உன்னை உணரச் செய்து துன்புறுத்துவதும் காற்றே.
கடமை போல் காற்றே.

நிலையுள்ளது உன் ஞான ஆத்மா என்றால் மனிதரார் நீங்கள் உங்களை உணருங்கள் இவ்வுலகிற்கு நன்மை.

மனிதா ! உண்மை சொல்லும் ஆத்மா. உப்பை உண்மையாக உண்ணும் நாவ் உளராமல் உண்மையைச் சொன்னால், உதவியைச் சொன்னால் உலகிற்கு நன்மைதானே.

மனிதா! பசுமையானக் காற்றே உன்னுள்ளிருக்கம் காற்று என்றாலும் காற்றுக்கும் திமிர் உண்டு என்பதை மறவாதே.

உன் திமிரை உன் காற்றே அடக்கும் என்றால் பாவம் ஓர்போதும் செய்யாதே.

மனிதா ! சுபம் என்பதும் சுமை என்பதும் உன் செயலால் தான் என்றால் சற்று சிந்தி!

மனிதா, நீ இவ்யுகத்தில் கண்டதும், கொண்டதும், கண்டிட்டதும் உண்டதும், யாதுவடா, கொள்வதும் சொல்வதும், செய்வதும் நன்னுற்றால் உங்கள் யாவருக்கும் இருக்கும் ஆத்மாவிற்கு நன்மை என்றால் யூகி.

சொல், செயல், நீ சொல்லும் சொல் நற்சொற்களாக இருந்தால் யாவருக்கும் நன்மை. செயலற்றச் சொல் உங்களுக்குத் தீயவைதானே. உண்பது பக்குவம் என்றால் உதவி செய்து மறப்பது எச்செயல்? நற்செயல். ஆத்மதத்துவ ஞானம்.

எல்லாம் தெரியும் என்கிறாயே காற்றும், உன் காற்றும் தினமும் இணைவதாவது தெரியுமா ? சிந்தித்துப்பார்.

மனிதரார் உணருங்கள். காலநிலை, கடமை நிலை. நிலை என்றால் எவ்நிலை. மனித குலத்தின் நிலை உன் நிலை யாது. சொல் நிலையது உலகில் பெண் என்கின்றவள் நிலை தாயின் நிலை இவன் இவளால் உள் ஞானவ நிலை. கொண்டான் பெண் ஆசை பாசத்திறன் கொண்டாள். ஆண் அன்பும் பாசமும் கொண்டால் இவ்வுலகிற்கு எத்தனையோ நன்மை உண்டு.

அறிந்த ஞானம், தெரிந்து ஞானம். இளமையில் மலர் போலும் தாயைக் காண்கின்றாயே அத்தாயை தந்தையை எக்காலமும் இருக்க யூகி.

உன் தாய் தந்தையை ஒருபோதும் பழிக்காதே.
தாய், தந்தைதான் உண்மையானவர்கள்
உன் தாய், தந்தைதான் ஞானவந்தர்கள்.

மனிதா ! நீர், நிலம், தானியம் காண்கின்றாய். காற்றைக் கண்டாயா? திறந்த தானியம், நிறைந்த நீர், மணந்தவ பூமி என்றால் உன் கண் எதைக் காண்கின்றன. உன் ஆத்மா எதில் மகிழ்கின்றது. சிறுமலரின் மணத்தைக் கண்டு ருசிக்கிறது.

பிஞ்சி பழுத்து விழுந்தால் பருவத்துக்கு எட்டுமா? காலத்தில் கனியாகி பின் கனிக்குள் விதைதானே. அதுபோல் நீ இளமையில் நல்லுணர்வாக இருக்க யூகி பாசம், நேசம், நேர்மை தான் உங்களுக்கு என்றும் என்றென்றும் வேண்டும்.

களவாடும் காகமும் இசைபாடும் குயிலும், திறனற்ற நரியும் என்றால் அவை யாவை? இவை எவைக்கு சான்று. கண்ணுள்ளார் யூகிப்பு யாது? கண்ணில்லார் நிலை யாது. செவிடனின் நிலை யாது. ஊமையனின் நிலை யாது. அவர்களினுள் இருக்கும் காற்றும் யாது. யூகி.

பறவை பறக்கக் காண்கின்றாய் என்றால் உன் விஞ்ஞானம் பாயும் பாய்ச்சலும் நிலையா? உன் விஞ்ஞானத்தால் பிரபஞ்சவத்தை ஓர்போதும் காண இயலாது.

உன் ஆத்மா காணும். நீ இவ்யுகத்தில் செய்யும் தர்மத்தால் தான் என்றால் சிந்தித்து விடை கொள்.

கண்டாய் போல் உண்டாய். உணர்ந்தாயா காற்றை உன் ஆத்மவக் காற்றைக் தான் உணர் என்கிறேன்.

மலர் கண்டாய் மணம் கண்டாய். மலரினுள் தேன் கண்டாயா. தேனீ சேர்க்கும் மலர் ஞானத்தை. மனிதா நீ தர்மம் எனும் ஞானத்தை சேர். உலகிற்கே நன்மைதானே.

உனக்கு திறமை எனும் அன்பிருந்தால் உலகிற்கே நன்மை.

ஒருவிதை, ஒரு மரம் ஒரு மரத்தால் எத்தனை விதை அதுபோல் ஒருவனால் உலகிற்கு வழி என்பது ஞானம்.

மனிதா ! இவ்வுலகம் உனக்கு சொந்தமன்றோ. காற்றும் நிலைதான் உன் காற்றும் நிலையோ.

இளமையில் அன்பை என்றும் மறவாதே.
இளமையில் பாசத்தை ஓர்போதும் மறவாதே.

நீங்கள் ஒருவருக்கொருவர் அறம் கூறு அறிவு கூறு. புத்தி கூறு. நல்சொல், நன்றியுள்ளாராக இருக்க உதவி செய்திடச் சொல். உன்னை நீ உணர் எனச் சொல்.

பொம்மைக்கு புத்தி கொடுத்து உலகத்தை பொம்மையாக்க யூகிக்காதே.

மனிதா ! சொல் எச்சொல்லும் சிந்தித்து செயல் அறிந்து சொல்.

வீரச்சொல் உதவிடச் சொல். வீரச் சொல் நல்லறிவைச் சொல்.

பாசமாக இருக்கக் கற்றுக் கொள். பாம்பாக இருக்க நினைக்காதே.

கழுதை வளர்ப்பனுக்கு கழுதை உதவும். பின்னொரு நாள் கழுகுக்கும் உதவும். நீ எவ்வாறு நீயே யூகி.

உன்னால் எது முடியும். உணர், பின் யூகி பின்னால் வருவதை முன்னால் உணர். சரீரவ நாடகம் கபடம்.

மனிதா ! சொல்லில் விஷம் கொள்ளா சந்தேகம் கொள்ளா.

தேளுக்கு வாலில் விஷம். பாம்புக்கு பல்லில் விஷம் உனக்கு நாவில் விஷம். உன் சரீரத்திமிரால் நாவை தடுமாற விடாத. காணப்ப விடாதே.

உலகம் நீசம் என்றாலும் உன்சொல் தெரிய அறிய சொல்.

மயில் ஆடுவதும், மான் ஓடுவதும் சற்று தான். பாம்பு ஆடுவதும் சற்றே தான். நீ ஆடும் ஆட்டம் என் சொல்ல. சரீரம் ஆடி உலகில் கண்டிட்ட பலன் யாது ? சிந்தி!

மனிதா ! நீ பொருள் சேர்ப்பது போல் அன்புள்ள தர்மத்தைச் சேர். அது தான் ஆத்மாவிற்கு நன்மை.

பூமி அழியாது. மண்டலம் அழியாது விதை வித்துக்கள் அழியாது போல் உன் ஆத்மாவும் அழியாது.

மனிதா ! ஒருவனிடம் பணமும், இன்னொரு வனிடம் பதவியும், மற்றொருவனிடம் கையில் மண்சட்டியும் உள்ளது. பணமுள்ளவன் யாரையும் மதிப்பானா? பதவியில் உள்ளான் நிம்மதியாக இருப்பானா ? மண்சட்டி ஏந்தியவன் தினமும் - பிச்சை எடுக்கின்றான். நிம்மதியாக இருக்கிறான் என்றால் ஆத்மத்தின் திறன் விதி.

மனிதா நீ நன்றுள்ளாருக்கு துணை சென்றால் உலகிற்கு நன்மை .

காற்றும் காற்றுக்குள் உன் ஆத்மா புகுந்துவிட்டால் அதிகாரம், அகம் எவையாயிற்று சிந்தித்துப்பார்.

விதை எதைக் கற்றன. உனக்குத் திறன் கொண்டு உதவிடத்தான் கற்றன. எல்லாம் கற்றேன் என்கின்றாயே. உலகிற்கு நீ செய்த உதவி யாதுவோ?

காளானும் கண்டாய். கற்கண்டும் கண்டாய் கடுகும் கண்டாய். எவைக்கு எவை சான்று, சிந்தி காளான் நிலையா. கடுகும் நிலை. கரும்பும் நிலை கற்கண்டை எவை கொண்டாய் யூகி

பிறப்பும், இருப்பும், இறப்பும். தொட்டில், கட்டில் இடுகாட்டிற்குப் போகும் போது பாடை என்றால் சான்றும் சான்றிற்றவ சான்றும் யாது.

மனிதா ! இவ்யுகத்தில் சொல்லி நிலை கொள்வாயா ? சொல்லா செயலுள்ள ஆத்மா வருவதும் தண்டனை அங்ஙனப் பிழை. இங்ஙனம் பிறவி.

மனிதா உணர். ஆற்றல் என்பது நீர். அறிவு என்பது காற்று. ஞானம் என்பது மலர். ஞானவந்தம் என்பது காற்றுக்குள் மறையும் மலரின் மணம். இவ்மணத்தை சிந்தித்து மகிழும் உன் ஆத்மா .

இளமையில் அன்பும் பின் வம்பும். பின் பிறவியும் நீசம். யாவரிடமும் அன்பு கொள்.

மனிதா ! சுடும். எவை சுடும் உணர். நெருப்பு சுடும். உன் அறிவு திறனற்ற சொல் சுடும். உன் எவ சரீர கர்மத்தால் எவையாவும் கெடும்.

அடேமனிதா ! உதவியும், உண்மையும், நன்மையும் நம்பிக்கையும் இளமையில் வளர்ந்து விட்டால் இவ்வுலகில் கலகமின்றி வாழலாம் தானே.

வழி சொல்வான் முனிவன் சொல்வதை உள்ளத்துக்குள் வைத்து சிந்தித்துப்பார்.

ஏ மனிதா! பசுமையும் உன்னிடம் தான். பக்குவமான ஆத்மாவும் உன்னிடம்தான். உன் நெற்றி எழுத்தும் விதியும் விடையும் உன்னிடம் தான். வஞ்சகத்தால் இவன் வாயால் உளருகிறான். பஞ்சாங்கம் பாசாங்கடாப் பாவி.

துணை துணைவி மனைவி என்பது ஒரவனுக்கு ஒன்றுதான் என்பது விதி என்றால் ஒரு விதைக்கு ஒரு மரம் தான் என்றால் சிந்தி!

காற்றாடி பறக்கிறது. நிலையானக் காற்றாடியா ? உன் சரீரம் நிலையா, உன் காற்று நிலை கூத்தாடி ஊர் ஊருக்குக்

கூத்தடிக்கிறான். கூத்தாடிக்குள் ஒரு ஞானவம் கொண்ட ஆத்மா திமிருற்றால் கூத்தாடியின் கதி என்னவாகும் நினைவாக உணர் விடை உண்டு.

மனிதா ! சிந்தித்து உணர் அறிந்து உணர் பாம்பிடம் அன்பு வைத்து நீ கண்ட பலன் யாவையோ, படித்தவர்களிடம் அன்பு வைத்து நீ கண்ட பலன் யாவை. நஞ்சினில் கொடியது சொல் விஷம் என்றால் யாவையும் அறிந்து யூகி.

மனிதா, காற்றாடியும் நூலும், நூலும் காற்றாடியும் போல் தானடா உன் ஆத்மா, உன் சரீரம் என்றால் காற்றுக்குள் காற்றாடி என்றால் நூலுக்குள் யாகை எகை உன் சரீரம் பாவமும், பழியும் செய்து உலகில் இன்பம் காணுமா ? சிந்தி!

கற்ற அறிவும் சொல், சொல் செவியும் ஆற்றவ அறிவு அதுதான் உலகிற்குத் தேவை உன் சொற்பறிவும், அற்பச் சொல்லும் எவைக்கு உதவும் குயிலின் இசை போல் தானே உள்ளன.

மனிதா உணர். உண்மையாது. நன்மை யாது எவைக்குள் எவ் எவையாது. உன் சரீரம் அழகா. உன் அன்பும் பாசமும் அழகா. உன் அறிவு அழகானால் உலகிற்கு நன்மை தானே. மனித குலமே ஆழ யூகி விடை உண்டு.

மனிதா தாராளம் எனும் குணம் பறவைகளிடம் காண்கிறாய். கூடிவாழ்வதையும் காண்கிறாய். மனித குலமே வழிபார்த்து செல்லும் நீ அப்பறவையின் இசையிலாவது செல்லலாம்தானே. மனிதா உயர்ந்தவக்குணம் உங்கள் குலம் தானே. விதியும் எழுத்தும் உன் நெற்றியில் தானே வரையப்பட்டன என்றால் சிந்தித்து விடை கொள்.)

மானிடனே! நீ மௌனத்தால் எதையும் சாதிக்கப்பார். மலர் சிரிப்பதைப் பார். பட்சிகள் கூடி வாழ்கின்றதைப் பார். சிந்தி! குளத்தில் நிற்கின்ற தாமரை எதைப் பார்க்கிறது? நிலம் சாகாது, நீர் சாகாது. காற்று சாகாது. ஆகாயம் சாகாது. பொன் சாகாது. எவ்விதைகளும் சாகாது. உன் ஆத்மாவும், நீ செய்கின்ற தர்மாவும் ஓர்போதும் சாகாது. இளமையிலே நீ நல்லறிவைக் கற்றால் இங்கும் லோகத்திலும் நிம்மதி அடைவாய்.

தேவர்களுக்கு வயதில்லை

தானியத்திற்கு வயதுண்டு

தரைக்கு வயதில்லை

தாவரத்திற்கு வயதுண்டு

தண்ணீருக்கு வயதில்லை

உன் உடலுக்கு வயதுண்டு

உன் உயிருக்கு வயதில்லை

நீ கற்றதெல்லாம் பொய்க்கதை என்பதனை மறவாதே. ஆதியில் கற்றவரும் இல்லை. கலகம் செய்தாரும் இல்லை . 5000ம் ஆண்டு முன் நல்லறம் கற்றனர். நல்லறம் உணராத நீ பகட்டில் வாழ்கிறாய். பாசத்தை தொலைத்து விட்ட நீ பக்தியில் வாழ்கிறாய். உன்னுடலுக்கு முடிவுண்டு. உன் உயிருக்கு முடிவே இல்லை .

பிறப்பைப் போல் இறப்புண்டு<br>
இறப்பைப் போல் பிறப்புண்டு<br>
பிறவியும் இல்லாதிருப்பதும் உண்டு<br>
அது ஏதென்று உணர் நீ..<br>
அன்பென்று இருந்தால் பிறப்பில்லை.<br>
அறிவென்று இருந்தால் பிறப்பில்லை.<br>
உழைத்து நீ உதவினால் பிறப்பில்லை.

. பூலோகத்தில் இன்பம் கண்டார் யாருமில்லை. சிறையில் வாழ்வதும் பூலோகத்தில் வாழ்வதும் ஒன்றே. - துன்பம் இல்லையென்றால் நீ லோகத்தை மறந்திடுவாய். படித்தவன் கள்ளன். படிப்பினை சொல்லிக் கொடுக்கின்றவன் பொல்லாத கள்ளன்.

பக்தி வெறி கொண்டவன் பொல்லாத கள்ளன்.<br>
உழைப்பற்ற சோம்பேறி பெரும் கள்ளன்

நாளை நாளை என்பவன் பெரும் கள்ளன்.

இறக்கம் இல்லாதவன் பெரும் திருடன். இதை சிந்திக்காதவன் அறிவாளி அல்ல.

அறிவை நீ கற்றிருந்தால் உலகில் அலங்கோலங்கள் தான் வருமா?

உச்சியில் கூடுகட்டி இன்பமாக வாழ்கின்ற பறவைகளைப் பார். உன் உடம்பெல்லாம் பிணிக் கூடு. காரணம் நீ செய்த பாவம்.

மாளிகையில் நீ வாழ்ந்து இவ்வுலகில் பலன் என்ன கண்டாய். இறக்கத்தான் போகின்றாய் நீ.

தர்மத்தைச் செய்திருந்தால் நீ இவ்வுலகில் நிம்மதி கண்டிருப்பாய்.

பக்கைப் பணமும் பொக்கை உடலும் பகைக்குத் தான் உதவின.

மலர் பார்த்து சிரித்தவன் நான்
தேங்காய் உடைத்து சிரித்தவன் நான்
ஓடும் நீரைப் பார்த்து சிரித்தவன் நான்
உன் பார்த்து ஒழிந்தலையும் மீனைப்பார்த்து சிரித்தவன் நான்

ஆகாயம் பொழிகையிலே சிரித்தவன் நான்
கனி பழுக்க மணக்கையிலே சிரித்தவன் நான்
காலை கோழி கூவையிலே சிந்தித்தவன் நான்.
காலை பட்சிகளெல்லாம் கூடி சிரிக்கக் கண்டேன் நான்.
ஊமை பணத்திற்கு கலகமிடக் கண்டேன் நான்.
தரைக்காய் மணக்கக் கண்டேன். தரைக் குள்ளிருக்கும் காயும் மணக்கக் கண்டேன். பாவி! நீ தலை தெரித்து ஓடக் கண்டேன. நீ பிணிபட்டு கூச்சலிட கண்டேன் நான்.

நீ செய்த பாவத்திற்குத்தான் தண்டிக்கிறேன் நான்.

தரைக்காக கலகம் செய்கின்றவரை கண்டேன் நான்.
தர்மத்திற்கு கலகம் செய்கின்றாரை காணேன் நான்.

பிறந்த அன்று சிரித்தவன் நீ. பின் ஒரு நாள் பணம் பணமென்று அலங்கோலப் படுகின்றாய் நீ.

எத்தன் எல்லாம் சித்தன் ஆனான் கண்டேனே. உன் யுகத்தில் போதாதா!

துறவிகள் எனும் மடையனால் வந்ததடா உலகிற்கு துன்பமெல்லாம்.

சாமியார் என்று உலகத்தில் வாழ்வாரெல்லாம் சுகமற்று போனார்களே.

காசு பணத்திற்குத் தானே கடவுள் கடவுள் என்றான்.
மந்திரவாதிகளை இனியும் நம்பாதே. யாகவா முனிவர் சொல்வதை நம்பு.

ஜோசியக்காரன் உன் காசு பணத்தை சூறையாடத் தான் வருகிறான். இனி யாரும் ஏமாறாதே.

கள்ளனில் கொடிய கள்ளன் ஜோசியக்காரன் என்பதை மறவாதே.

பல்லவி பாடுகின்றவன் அத்தனையும் பச்சோந்தி.
வெற்றுக் கல்லைப் பார்த்து பகவான் என்று கூறும் கோமாளிகளைப் பார்த்து நீ என்ன நினைக்கிறாய்.

வெற்று நூல் உடலணிந்து ஓஹோவென்று வருபவன் உழைப்பில்லா சோம்பேறி.

கரையானைப் பறக்கவிட்டேன் நான் இரவிலே.
காலநிலை அறியா கரையானைப் பார். காலநிலை அறியக்கூடிய மானிடனே உன்னைப் பிறக்கவிட்டேன் பின்னொரு நாள் இறக்கவிட்டேன். என் செய்வாய் நீ?
இருக்க இளக்கம் கொள்ளா, இறக்க இளக்கம் கொள்கின்ற பாவி நீ.

உயிருள்ள குரங்கு தாவி ஓடும். உயிரற்ற கற்சிலை குரங்கை ஓடி வணங்குகின்றாயே. பாவி சற்றாவது உணர வேண்டாமா நீ.

இறை தேடி அலைகின்ற நீ இறைவா இறைவா என்று கதறாதே. பாவமடா உன் கேடு கெட்ட சரீரம்.

கழுதைக்கு இருக்கும் ஞானம் காவி உடைகாரனுக்கு இல்லையே.

கற்றவனுக்கு வேதம் வராது. கற்பினை அற்றானுக்கு வே தம் வரும். உணர்ந்துபார். விடை உண்டு.

ஆதியில் சித்தர்களாக வாழ்ந்தார். தற்போது பித்தர்களாக வாழ்கின்றார் துறவிகளெல்லாம். மானிடனே உஷார்

ஆதியில் ஊதி சொன்னான். பின் எழுத்தாணியால் சொன்னான். தற்போது அறிவைச் சொல்கின்ற பேனாவே அழிவைத்தான் சொல்கின்றன. மூடனே உணர்ந்து பார்.

புத்தியில்லாதவன் புலவன் என்பான். காலம் தெரியாதவன் கவிஞன் என்பான் தன்னை உணராதவன் அறிஞன் என்பான். பாவமடா நீங்கள் மூன்று பேரும். வேம்

பாடி வைத்தான் பரதேசி யாகவாமுனிவன். படித்த பச்சோந்தி எடுத்து திருத்தி பரிசு வாங்க நான் கண்டேன்.

யாகவா முனிவர் கூறுகின்ற ஊற்று ஊற்றென்ற ஊற்று. ஆகாய ஊற்று கெடாது. தரை ஊற்று கெடாது. ஊற்றென்ற ஊற்று நீ உறிந்தெடுத்த ஊற்று தாயூற்று. தாய் உதவினாள் பாசத்திற்காக. தந்தை உதவினான் பசிக்காக. உண்மையும் உதவியும் இவ்வுலகில் செய்திட்டார் பெற்றோர். பெற்றாரை உயிரிருக்க வணங்கும். உதவு முதலில் உன் பெற்றோருக்கு. உதவி செய். ஞானம் கொள். நிதானம் கொள். நிம்மதி லோகத்தில் கிட்டிடுமாம். உடலழிந்தாலும் உயிரழியா. ஆத்மா ஜனனத்தில் ஆத்மா. பிறந்து 11வயதுவரை ஆத்மவம் 11க்குப் பின் யாத்மா. 41க்குப் பின் யாகாத்மா. விதை மலர் காய், கனி, விதை. இவைக்குள் விடை கொள்கவே

வஞ்சம் கொள்ளாதே.

இளமையில் காலத்தில் நீ நல்ஞானம் கூற்றுக் கொள்

பிறரை வஞ்சிக்காதே

பிறரை பகைக்காதே

பிறரை சந்தேகிக்காதே

உன் பெற்றோரைப் போல் மற்றவர்களையும் நினை

சகுனம் பார்க்காதே.

சாஸ்திரம் படிக்காதே

தவம் கொள்ளாதே

கைரேகை பார்க்காதே

ஜோசியம் பார்க்காதே.

மரணத்தை ஜனனத்தில் நான் நிச்சியிக்கிறேன். என் கணக்கு ஓர்போதும் பொய்யாகா. உன் கணக்கு ஓர் நாள் பொய்யாகும். நான் எழுதிய ஜனனத்தில் எழுதிய எழுத்தை இவ்வுலகில் செயற்கையால் மாற்றிடுவான் யாரும் உண்டோ ? என் எழுந்து இயற்கை. உன் எழுந்து செயற்கையே சிந்தி!

(யா – என்றால் பிணி ஓடும் ப இங்கும்
க – என்றால் பஞ்சங்கள் பிரிந்தோடும்.
வா – என்றால் வசந்த மழை பொமியம்.

மனிதனுக்கு குணம் ஆறு. ஆறு அறிவு. ஏன் எதற்கு? மடிந்தவனை புதைப்பதற்கு ஓர் அறிவு. உயர்ந்த அறிவு உனக்குத் தானே. புதைப்பதற்குத்தானே முந்துகிறாய். உதவுவதற்கு ஏன் பிந்துகிறாய்? ஜீவராசிகளுக்கு ஓர் அறிவு. எனெனில் அவை மறைந்து (செத்து) விட்டால் அதை புதைப்பதற்கு அதற்கு பலமில்லை.

மனிதனுக்கு பேரறிவு. பறவைகள் கூடி வாழ்வதை உணராதிருப்பது உனக்கொரு பேரழிவு. உன்னை நீ உணராதிருப்பதும் பேரழிவே.

பூசாரிக்கு உதவாத கற்சிலைகளெல்லாம் உனக்கு உதவுமாடா. கற்சிலைகள் உதவக் கண்டவன் யாரேனும் உண்டோ ? சிந்தி !

உயிர் வீண் போகாது

விதி வீண் போகாது

உடல் வீண் போகும்

முள்ளை விட கொடியது சொல். எனவே உன் நாவை பக்குவப்படுத்து.

உன் நாடி துடிப்பு கையிலே. நாவிலே அல்ல.
செடியிலே முள்ளிருக்கும். மலரிலே முள் இருக்குமா ?

வீண் சொல் சொல்லி உதை வாங்குவான். உடல் தான் என்றால் நாவ் உதை வாங்குமா? நாவ் உள்ளோடி தான் ஒளியும்.

ஓதுகின்றவன் ஓதுகின்றான்
ஊதுகிறவன் ஊதுகின்றான்
ஒப்பாரி தான் வைப்பான்
மடிந்தவன் உயிர் பெறுவானோ,
உயிர்பெற்றால் உலகம் தாங்கிடுமா ?

ஆகாயம், பறவை, சிரிக்கும். சிரிப்பிலே பலவகை உண்டு சிரி, தாசி போல் சிரிக்காதே. தர்மமாக சிரி. தாசியின் சிரிப்பு சாடையிலே முடியும். தர்மத்தில் சிரிப்பு ஞானத்தில் முடியும்.

பெண் மௌனம் கொண்டால் விதைகளெல்லாம் மடிந்து போகும்.
ஏழையின் பசியை ஏழைதான் உணருவான்
உள்ளத்தில் கறையில்லான் வாயிலிருந்து வரும் சொல் கறையில்லாமலே இருக்கும்.

மலரைக் கொடுப்பான் கடைக்காரன்
மலரின் ஞானத்தைக் கொடுப்பானா ? சிந்தி !

பட்டம் சட்டம் பெற்றவனெல்லாம் பரதேசி ஆகி அலைவான்.

இனியது இனியது பிறரை கெட சொல்லாதிருப்பது இனியது.

இனியது இனியது நீ உன்னை உணர்வதே இனியது.

இனியது இனியது பிறரை பகைக்காமல் இருப்பது இனியது.

இனியது இனியது இன்றும் என்றும் இனியது அறிவு ஆறும் இனியது.

ஆறு அறிவு தான் கொண்ட மானிடா இனியது ஆறறிவில் ஓர் அறிவு புதைப்பதே இனியது.

பொருள் பெரிது. புண்ணியம் சிறிது
உயிர் சிறிது. உடலோ பெரிது.
கெட்டுப் போன உடலுண்டு
பட்டுப் போன மரமுண்டு.
கெட்டுப் போன தேனுண்டோ ? சிந்தி!
அற்பனுக்கு ஆசை ஏராளம்

நன்மையை நாளெல்லாம் செய்யாவிட்டாலும் என்றோ ஓர் நாள் செய். கர்மத்தை செய்ய நினைக்காதே.

பல் எதிரி நாவுக்கு. சொல் எதிரி மனிதனுக்கு யானைக்கு துதிக்கையில் பலமுண்டு. உனக்கு நாவிலே.

சாடை கதை போட்டு சரியான அடி கொடுப்பார் யாகவா. தெரிந்திடுவார் அறிந்திடுவார் உணர்ந்திடுவார். அறியாதார் எது செய்திடுவார்.

வீரன் வாழ்வு தர்மத்தில் தெரிந்திடுமாம்.

தர்மமும் தான் ஆடினால் அழகாகும். விதை மரமாக களஞ்சியம் தான் கொண்டு காற்றிலே ஆடினாலும் அழகாகும். தாசி ஒருத்தி பல்லைக் காட்டி அழகென்று ஆடினால் ரசனையாகுமா?

அடிக்கடி சிரித்தால் அழகாகாது.

கற்றவன் கவிகளெல்லாம் காது வரைதான் எட்டிடும் உள்ளம் வரை எட்டிடுமா? ஆண்டிகளின் சொற்களை தெளிவாக உணர்ந்து பார்.

ஆண்டிகள் துறவியாவதுண்டு. பட்டம் படித்த பச்சோந்திகளும் துறவியாவதுண்டு என்றால் அவன் செய்த பாவமே அவனை துறவியாக்கியது.

உடைந்து சிதறிய கற்கள் நடைபாதைக்கு உதவும். நீ பெற்ற பிள்ளை உனக்கும் உலகிற்கும் உதவினால் நன்மையே. நீ வடித்த சிலை எதற்கு உதவியது. உன் சிந்தனை எங்கே? யூகி

நீ வளர்த்த நாய் உன்னைக் காக்கும். நீ பெற்ற பிள்ளையும் உன்னைக் காத்தால் பெருமைதானே.

உன் நற்செயல் உலகம் உணர சிந்திக்க நீ நல்வழி கூறு.

பெற்றோரை மதித்து வாழ்வாரே உயர்வடைவார்.

கலகம் செய்து புகழ் வாங்குவதை விட கடமை செய்து புகழ் வாங்குக.

மனிதா! காதுக்கு ராகமும் ஆத்மாவிற்கு ஞானமும் நீ கொடுத்தால் நான் எதற்கு ? அறிவை மகிழச் செய்.

இவ்வுலகில் நான் கண்டதும் கேள்விப்பட்டதும். தர்ம வாதி தாழ்வாக வாழ்கின்றான். கர்மவாதி கொலைகாரன் நாட்டில் மன்னராக திகழ்கிறான். 1986, 1990 லிருந்து பார் உன் ஆத்மா யாத்மா யாகாத்மா என் செய்யும். பழிக்குப் பழிவாங்கும்.

கஷ்டம் போக மருந்து உன்னை நீ உணர்வதே.
உதவினால் உயர்வடைவாய்

மந்திரம் எற்றக் கயவர்கள் பிழைப்புக்காக நடத்தும் நாடகம்.

கடல் நீர் சுவைக்கா உன் சரீரம் என்றால் உன் ஆத்மா அக்காற்றைச் சுவைக்கும் என்றால் சிந்தி!

பம்பரத்தைச் சுழலச் செய்தாய், சிலையும் நடவும் குணம் உடையதுதானோ யூகி.

தானியத்தைச் சிந்திப்பார் உயர்வடைவார் தத்துவத்தை உணர்வார் நிம்மதி அடைவார். இவன் வடித்த சிலையை நீ வணங்கி உயர்வடைவதும் உண்டோ ? சிந்தி !

மனிதா! - கழுதைக்கு உதைக்கத் தெரியும்போல் சாமியார்களுக்கு உன்னை ஏமாற்றவே தெரியும் உணர்ந்து விடைகொள்.

மனிதா! உடலின் அழுக்கைக் கழுவுவது போல் உன் உள்ளத்திற்குள்ளிருக்கும் அழுக்கைப் போக்க நினை.

மனிதா! ஆடையை சுத்தம் செய்வது போல் உன் அறிவை தெளிவாக, திறமையாக, பாசமாக வைக்க நினை.

கடமையைச் செய்யா கயவர்கள் ஊராரை ஏமாற்றும் எற்றர்கள் புலித்தோல் மான்தோல் போடும் மண்டியிட்ட மடையர்கள் என்றால் சிந்தி !

இளமைப் பருவத்தில் உன் புத்தியை தூய்மையாக வைக்க நினை.

வேதங்களால் உன் விதி மாறாது. உன் தர்மத்தால் நீ இன்பம் காண்பாய்.

மனிதா! கரடி கடிக்கும். கழுதை உதைக்கும் என்றால் நற்குணம் நரியிடம் உண்டோ ? சிந்தி !

நரிக்குணமுடையார் உதவாதார். பின் உதை படுவார் கண்டிப்பாக என உணர்.

கல்சொல்லும் கதையும் உண்டோ ? சிந்தி !

நீ ராகம் பல்லவியை ரசிப்பது போல் ஞானம் எதுவென உணர்ந்து ரசிப்பதே ஞானம்.

மனிதா! வேடம் விபரீதம். உன் ஆத்மா கொடியது என்பதை மறவாதே.

மனிதா! நீ உணர். உணருமுன் உன் செயல்களை சிந்தித்து உணரேன்.

மனிதா, உண்மைக்கு பலம் உண்டு. உதவிக்கும் பலம் உண்டு. உன் பதவிக்கு பலம் உண்டோ ?

உடும்புக்கு காலில் பலம் உண்டு. உன் ஆத்மாவிற்கும் பலம் உண்டு. உன் உதவி உலகிற்கு பெரிதும் அறிவே உன் சொல் செயல் நல்வழி செயலானால் யாவருக்கும் நன்மைதானே யூகி.

மனிதா பலமிருந்தால் உதவ நினை

நீ கோபம் கொண்டால் பிறருக்கு உதவ நினை.

நீ கோபத்திற்கு அடிமையாகாதே. உன் ஆத்மாவிற்கு உன் சரீரம் அடிமை என சிந்தி!

நீ அறிவை உணர் ஆசையைக் குறை.

நீ அடிக்கடி சிரிப்பாரை நம்பாதே. ஆனாலும் சிரிப்பில் லாரையும் சிந்தி!

நீ இளமையில் உதவ நினை உனக்குப்பின் இன்பம் காணும் உன் ஆத்மா

உலகப் பற்றுடையார் – பாசம் உடையார் தானும் நிம்மதி காண்பார்

மனிதா! உழைப்பின்றி உயர்வடைவார் யாருமுண்டோ ? சிந்தி !

பசுவின் பாலுக்குள் வெண்ணெயும் நெய்யுமென்றால் உனக்குள்ளிருப்பது எது யாதுவென உணர்.

வேதம் பெரிதாகாது விதி பெரிது

விதை சிறிது. மரம் பெரிது

ஞானம் பெரிது. உன்னை நீ உணர்வது யாவிலும் பெரிது.

காலம் என்பது சரி. பயிர் என்பதும் சரி. பயிரைக் காப்பான் உழவன். உன்னை உன் செயலைக் காப்பான் யாகவா முனிவன்.

இரண்டு இனத்துக்குள்ளிருக்கும் இனம் ஆத்ம இனம் ஒன்று. காற்று, நிலா, நீர், சூரியன் வகைவகை போல் உன் உடலில் முகம் மட்டும் யாவருக்கும் மாறுபட்டவை.

தர்மம் என்பது நூற்றிப்பதினொன்று. கர்மம் என்பது நூற்றிப்பதினொன்று. பிரபஞ்சஷ்வ ஞானம் என்பது பதினொன்று.

நல்லதை உண்பது போல் மற்றவர்களையும் நல்லவர்களாக நினை.

உன் உடல் நாவிற்கு நரம்பு ஏராளம் போல் ஓர் விதைக்கும் நரம்புண்டு. நட்சத்திரத்திற்கு திறன் உண்டு.

நீ செய்யும் தர்மத்தைப் பார்த்து சிரிக்கும் ஆத்மா என்றால் நீ செய்யும் கர்மத்தைப் பாராது போலா ? யூகி.

மாயனார் எழுதுகின்ற கருத்துக்கள் ஆதி அந்த ஏடுகளாகும். 5000ம் ஆண்டு முன் பிரம்ம வந்த காலம் பிரவந்த காலம். 5000ம் ஆண்டிற்குள் துஷ்டனவ காலம். அக்காலம் அழிக்கப்பட்டு விட்டது. லிபி என்னும் விதியை இவள் கருதரித்த அன்றே நான் வரைந்தேன். ஞானத்திற்குப் பல பொருள் உண்டு. நிதானத்திற்குப் பொறுமைகள் உண்டு. தர்மத்திற்கு எத்தனையோ ஞானம் உண்டு. நீ செய்யும் கர்மத்திற்கு எத்தனையோ பிறவி உண்டு. இவ்யுகத்தில் துன்பமும் உண்டு.

மண்ணாகி, விதையாகி, யாகி, காற்றாகி, நீராகி, ஒலியாகி, விதையும் உயிராகி யாகி யாவென்ற வித்துக்களும் புனிதமாகி பின் நீ காற்றிலே இணையாகிக் கருவாகி விதியாகி உயிராகி பூமியிலே உலாவினாய். சொர்க்க பூமியும் இதுவல்ல. சொர்க்கமும் இதுவல்ல. சொர்க்கம் என்பது வெண்ணுலகம் மண்ணுலகம், ஆதி தோன்றி 38000 கோடி ஆண்டுகள் ஆயின அவையில் கர்மம் செய்ய இவையில் பிறவி கொள்கின்றாய் அவ்வுலகம் மீண்டும் நீ அடைய இவ்வுலகில் தர்மம், உதவி செய். அவையில் உயிர்விட்ட உடல் நிலையே. அவ்வுயிர் இவ்வுயிர் நிலையே. இவ்வுடலை நிலையாக வைத்திட்டார் யாரேனும் உண்டோ ?

நீ உழைப்பால் இவ்வுலகில் ஏதும் அடையலாம். பக்தியால் ஏதும் அடைய இயலாது என்கின்றார் யாகவா. தர்மத்தால் நீ ஏதும் அடையலாம். தவத்தால் நீ ஏதும் அடைய இயலாது பிறப்பார் இருப்பார், பெறச் செய்தவர் இறப்பார் இதுதானே நீ கண்டாய், தரை காத்திருக்கிறது உடலுக்கு, லோகத்தில் உன் உயிருக்காக நான் காத்திருக்கிறேன், உன் பிறவியிலே கருவிலே விதி வரைந்து பிறப்பும், இறப்பும் வரைந்தவனும் நான் தான்.

பிறப்பின் ரகசியம் – முகம் மாறு படச்செய்கிறேன். இனம் இரண்டுபடச் செய்கிறேன். உயிர் ஒன்றுபடச் செய்கின்றேன். தர்மாவைச் செய்தவன் உயர்ந்த ஜாதி. கர்மாவைச் செய்தவன் தாழ்ந்த ஜாதி என்றே லோகத்தில் குறிப்பிடுகின்றேன் நான். நீ சரியாக வினா விடை கொள்.

உன் பிறப்பின் காலங்கள் நூறு தூங்கிக் கெட்ட காலங்கள் ஐம்பது. ஓடி கெட்ட காலம் இருபது. படிப்பும், உழைப்பும், இல்லறமும் கொண்ட காலம் இருபது. ஊன் முடம் கொண்டது பத்து. அதுதான் உன் மரணகாலம். உன்னுயிர் உடல் விட்டு ஓடிய போது தடுத்திடுவான் யாரேனும் பூலோகத்தில் உண்டோ ? மானிடரெல்லாம் இக்காலத்தில் உணர்ந்தால் ஆதிகாலம் போல் இதுதானே.

கடமையைச் செய். கலகம் இன்றும் என்றும் ஓர்போதும் செய்யாதே. இளமையிலே நீ அன்பைக் கற்றுக்கொள். பக்தியாலும் பகையாலும் நீ ஏதும் அடைய முடியாது. உன் உடலுக்கு உன் ஆன்மாவே எதிரி, ஆன்ம வேதம் ஐந்து. ஞானம் 1011. நிதான தத்துவம் 1011. இதை நீ கடை பிடித்தால் முக்தி அடையலாம். தேவர்களுக்கு வழி காற்று. உன் அழகு அழகல்ல உன் அறிவு அழகாக இருந்தால் நல்லதே.

5000ம் ஆண்டு முன் இயற்கையைத் தான் ரசித்தார். இயற்கை ஓர்போதும் அழியாது. நான் படைத்தது இயற்கையாகும். இயற்கையை சோதிக்கா. என்னையும் நீ சோதிக்கா. உன் நிலை நான் அறிவேன். என் நிலை நீ ஓர்போதும் அறிய இயலாது. செயற்கை வீண் போகும் காலமீது. ஆதி பொற்காசு வருகின்ற காலமிது. 2005க்குள் வந்திடும்.

பொற்காசு காலம். புதுப்புது நல் வசந்தங்கள் தான் தோன்றும். நீருக்கு மேல் தாமரைப்பூ நிலையாக நிற்பதில்லை. தரைக்கு மேல் சூரிய காந்தியும் நிலையாக நிற்பதில்லை. அதுபோல் நீயும் நிலையாக நிற்பவனல்ல. யாவையும் அறிந்து செயல்படுவாயானால் நீ அழிவைச் செய்வாயோ?

## எதிர்காலம்

இனான்ய முனிவன் 1.1.1993 முதல் காற்றில் ஜனனம், இவ்யுகத்தில் 9.9.1993 காலை 5.15 மணிக்கு உன் போல் யுகம் கொள்வான். உருவில்லா காற்றில் உலாவுவான் 11.11.1993 இரவு 1 மணிக்கு இனான்ய முனிவனும், 111 ஒற்றர்களும், 111 கோடி முனிவர்களும் கர்மாவை அழிக்க ஆரம்பிப்பார். இனி கலிங்கப் போர்.

விஞ்ஞானம் அழியும். பொய் வேடதாரிகளெல்லாம் போகின்ற இடங்களிலெல்லாம் துன்பத்திற்குள்ளாவர். பொய்த்துறவிகளை குழந்தைகள் கல்லால் எறிவர். பயிர்வாடும். உழவன் வாடுவான். தாய் வாடுவாள். குழந்தை வாடும். 1992 முதல் 1994 வரை பெண்கள் மானபங்கப்படுவர் உலகமெங்கும். 1995 முதல் ஆண்கள் பெண்களால் பெரும் துன்பத்திற்குள்ளாவர். இது உலகமெங்கும் நடக்கும்.

நிலையாகப் பதவி வகிப்பார் யாருமில்லை. அரச சிம்மாசனம் அலங்கோலமாகும். குழந்தைக்காக தவம் இருப்பார் அரிதே. எக்காலமானாலும் கர்மா என்பது ஓர்போதும் ஜெயிக்காது. தர்மாவே வெல்லும். நாட்டுக்கு நாடு கலகம் செய்வதே அரிது 2007க்குப்பின் விஞ்ஞானம் சற்றும் இருக்காது. ஆகாய லோகம் எக்காலமும் வெடித்துச் சிதறாது.

2005க்குள் நீ வாழ்கின்ற தரைதான் வெடித்துச் சிதறும். ஓட்டுரிமை இராது. 2005க்குப் பின் நல்லவர்கள் ஆட்சி புரிவர். நீதி மன்றங்கள் இருப்பது அரிது. கோவிலிருக்கின்ற இடத்தில் குடியிருப்பதும் அரிது. அரசமரம் இருக்கின்ற ஊரில் குடி இருப்பர். கர்மங்கள் செய்கின்ற கண்டங்களைச் சூறாவளிக் காற்றால் அழிப்பேன். உன் துப்பாக்கி உன்னையே பழி தீர்க்கும்.

111 கோடி முனிவர்கள் உன் அகந்தையை அழிப்பதற்கென்று எக்காலமும் யுகத்திலிருப்பர், ஆதி காலம்போல். புதுவித ஆத்ம ஞானம் தோன்றும். ஊரார் தீர்ப்பு உலகத்தின் தீர்ப்பாகும். 2005 லிருந்து மனிதன் பேராசையைக் குறைத்து புனிதத் தன்மையின் ஞானமுள்ளவராக வாழ்வார். அரசு மரத்தடியில் திருமணம் நடக்கும். இனி பகுத்தறிவால் வாழ்வார் உண்டு. 5000ம் ஆண்டிற்குள் அசுரவர்கள், முனிவர்கள் மாயைகள் சித்தர்கள் பழி வாங்கத்தான் யாகம் செய்தனர். 1986 க்குப்பின் யாகம் செய்தால் பேரழிவுக்குள்ளாகும்.

கோவில் அழியும் இடிமின்னலால். கலகம் முந்தும். கடமை 1997ம் ஆண்டு முதல் ஆரம்பம். ஆனால் 2005ம் ஆண்டு முதல் சுபயவ சுபிட்ச்சவயம் காணும், உன் உடல் உன் உடல் காற்றும் என்றால் சிந்தி! மதம் அறுந்து போகும். மணம் கொள் உடல் மதம் அறும். தர்மம் வெல்லும். அழிப்பார் நீயானால் தடுப்பார் நானாவேன். யாகவா முனிவரால் யாவும் முடியும். உன்னால் உணரவே இயலும் என்றால் முன்னுணர்.

ஸாஸ்வ சதுஸ்வ யாவ யாகாயவ

விஞ்ஞானம் எஞ்சானமாகும். நட்சத்திரம் பறவை மிருகம் பலவகை தோன்றும். பறக்கும் முனிவர்களை நீ கண்ணால் காணலாம். இதை கதையாக நினைக்காதே. கடமையாக நினை. மாயை எனும் பெண் இனம். முனிவர் எனும் ஆண் இனம். ஞானியெனும் மாயை இனம் உலகமெங்கும் தோன்றும். 1986 நாள் முதல் ஆரம்பம். 1990 கர்மவம் காண்டவம் தானதாண்யவம். 91ம் ஆண்டு முதல் துஷ்டா துஷ்டாயவம்.

மதப்பிரதானவம் வேண்டாம். ஞானம் வேண்டும். மனிதரார் குலம் யூகித்து செயல்பட அன்பு அறிவுதான் முக்கியம். மதப்பிரதானம் கொண்டிட்டால் அழிவே. முனிவர்களை சோதித்தால் அழிவே. உலகம் என்கின்றாய். உலகில் நடவப்போவது பஞ்சம், பட்டினி, வெப்பம். வெப்பம் காண்டால் பயிர்வாடும். பச்சிளம் குழந்தை வாடும். தாயும் தகப்பனும் வாடுவார். உலகமெங்கும் 1986 முதல் இது நடவ ஆரம்பம். 2002 வரை உண்டு. மனிதன் மனிதனை அழிப்பது

பாவம். இதனால் உலகமெனும் யுகத்திற்கு நூற்றிப்பதினொரு காண்ட முனிவர்களும் சாபமிடுவார். யாகவா என்பது இவர். இவரே அவர். அவரே இவர்.

1992 முதல் கடலில் பெரும் பூகம்பம் கரையில் பல பூகம்பம், இடிமின்னல், சூறாவளி, நெருப்பு சீற்றம், வெப்பம், பயிர்வாடும், களஞ்சியம் குறையும். வரட்டு கௌரம், அதிகாரம் ஆணவம் கொண்டாருக்கு பிணி, பஞ்சம், பறவைகளால் விஞ்ஞானம் அழியும். நாடகவம் குறைவு வேஷம் விபரீதம் இப்படி நூற்றிப் பதினொரு கோணங்கள் உண்டு 1992, 1-1-1992 இரவு 1 1/2 மணி முதல் யாகாஸ்வ யாவ துஷ்வம்.

11.11.1992 லிருந்து 2003 வரை உலக மெங்கும் பேரழிவாம். அரசகோலங்களெல்லம் அலைபாயும். ஒப்பாரியாகும். அசுரகோலங்கொண்ட மானிடர் அழிவர். தர்மம் செய்தவர் தலை நிமிர்ந்து நடப்பர். தர்மம் செய்யாதவர் தலைநிமிர்ந்து நடவார்: கடலில் பூகம்பம் வெடித்துச் சிதறும். ஆகாயத்தில் பறக்கும் தட்டில் பலகோடி முனிவர்கள் உலாவி வருவார்கள். தங்கம் தெருவில் விற்பான். தானியம் கிடைக்காப் பொருளாகும். உலகமெங்கும் தானியப் பஞ்சங்கள் வரும். நீ நடந்து போகின்ற தெருக்களெல்லாம் பிணங்கள் தான் தாண்டிச் செல்வீர். நீ பெற்றெடுத்த குழந்தைகள் பிரிந்தோடிதான் அழும். விஞ்ஞானம் கெடும். பஞ்சாங்கம் கெடும். ஓலைச் சுவடியின் நாதங்கள் ஒலிக்கும்.

1986 முதல் கோபுரங்கள் இடிமின்னலால் அழியும் கொடிக் கம்பங்கள சரியும்

அக்னி சீறும்
உன் விஞ்ஞானம் கெடும்
அதிசய நட்சத்திரம் தோன்றும்
அதிசய பட்சிகள் தோன்றும்

நாய் போல் பல ஜீவராசிகள் இல்லத்திற்கு வரும். அவையாரென்று கண்டுபிடி பார்க்க இயலும் பிடிக்க இயலாது.

மழைக்கு பருவகாலங்கள் இல்லை

காற்று சீறும்.
இடி மின்னல் நெருப்புப் பிழம்பாக கக்கும்
ஆகாயம் சீறும்.

பல நாடுகள் அழிந்து போகும். பல நாடுகளின் பஞ்சம் போக்கும் நாடு இந்தியா, சீனா உலகில் மனிதன் பசிதீர்க்கும் நாடு. இந்தியாவிலும் சீனாவிலும் ஜப்பானிலும் முனிவர்கள் மாயைகள், சித்தர்கள் பிறப்பார்கள். 1949ம் ஆண்டு முதல் பிறந்துள்ளார்கள். 1992ம் ஆண்டிலிருந்து 20 வயது 22 வயது 23 வயது 26 வயது 29 வயது உடைய ஆண் பெண் தீஙர் என அகால மரணம் கொள்வார்கள் இது உலகம் எங்கும் நடக்கும் இந்தியாவில் பிரியங்கா மகாராணி ஆவார்.

1999ம் ஆண்டு சீனாவிலும் ஓர் பெண்மணி ஆட்சிபுரிவார்

ஜப்பானில் பல அற்புதவாதிகள் முனிவர்கள், மாயைகள், சித்தர்கள் பிறப்பார்கள்.

இந்தியா, சீனா, ஜப்பான் தர்ம நாடுகளாகும். மற்ற நாட்டின் துன்பம் சொல்ல இயலாது.

2002க்குள் பலசோதனைகள் தாண்டவனம்.

இவர் விடைபெற்று படுத்திருப்பார். இவரை யாரும் பார்க்க வேண்டாம். ஏட்டின் அவ்ஞானம் கேட்டு சுவனவ் கொண்டிருப்பார்.

★ ★ ★

# யாகவரின் வேதங்கள்

1. சத்யம் சாந்தி ப்ரண்ணம்
சாந்தி சாந்தி சாந்தி
வசி வசி வசி
ஸப்த ஸப்தன ஸப்தஹா
ப்ரண்ணம் ப்ரணஹாய ப்ரண்ணம்
ப்ரண ஹந்தஹாய ப்ரண்ணம்
சப்த ஹாய ப்ரண்ணம்
சப்தத்வன ஹாய ப்ரண்ணம்
ப்ருஹுனாய ப்ரண்ணம்
ப்ரண ப்ரனணப்ரணஹாய ப்ரண்ணம்
உஹந்தம் உஹந்தன உஹந்தஹாயவே

2. வசி வசி வசி
வசியந்த ஹாய வசி
வசி ப்ரஹந்தஹாய வசி
ப்ரஹுனாய வசி
ப்ரவத் வனஹாய வசி
யாஹ ப்ரபஞ்சஹாய வசி
யாதுனாய வாயவே
யாதுனா யாஹப்ரவத் வனஹாய வசி

3. ஹரி ஹரி ஹரி
ஹரி துனாய ஹரி
ஹரியந்தஹாய ஹரி
சப்தஹாய ஹரி
சப்தானுவாய ஹரி
சப்தத் வனுஹாய ஹரி
சப்தத் வனுஹாய ஹரி
நாத நாதானுவாய ஹரி
நாதப் ரவத் வனஹாய ஹரி
நம் நமஹாய வாயவே
நாதானுவாயவே
யாஹீனாய வாயவே

4. சாந்தி சாந்தி சாந்தி
யாஹ யாஹானுவாய சாந்தி
யாஹ ப்ரவத் வனஹாய சாந்தி
நாத நாதானு வாய சாந்தி
யாஹ யன யனன யனஹாய வாய சாந்தி
நாத நாதானுவாய யாஹப்ரவத் வனஹாய சாந்தி
நம் நமஹாய வாய சாந்தி
நாதம் நதம் நாத நதம் நாதத்வனஹாய சாந்தி
யாஹ ப்ரபஞ்ச யாஹ ப்ரபஞ்சஹாயவே

5. ப்ரபஞ்சஹாயவே
யாஹீனாயவே
யாதுனாயவே
சாதுனாயவே
சத்யத்வனஹாயவே
ப்ருஹீனாயவே
ப்ரபஞ்சஹாயவே
ப்ரபஞ்சத் வனாத நாதானு வாயவே
உஹந்தஹாயவே
உஹந்தத் வனஹாயவே
சாது சாதுனா யாஹயனனயை யனஹாயவே
சுப நவ சுபயவ யன யனன யனஹா
யவைந்த நாத நாதத் வனஹாய ஹரி
சுபிட்சத் வன ஹாய வாயவே.

(இப்புத்தகத்தில் உள்ளவைகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ யாகவா - வசியா அறக்கட்டளையின் அனுமதியின்றி பிரசுரம் செய்வது குற்றமாகும், அப்படிச் செய்தால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.)